பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 06 திங்கட்கிழமை (22-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:239

# உலகெங்கும் உள்ள தமிழர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்பது புலிகளால்தான்!

## உலகத் தமிழர் பேரமைப்பு ஆரம்ப மாநாட்டில் மங்களூர் எம்.எல்.ஏ. திருமாவளவன் முழக்கம்

சென்னை,ஜூலை22

**உலகெங்கும் தமிழர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்பது தமிழீழ விடுதலைப் புலிகளால்தான்.**

**- இப்படி சென்னையில் நேற்று நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்பு இரண்டாம் மாநாட்டில் முழங்கினார் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்புத் தலைவருமான திருமாவளவன்.**

அவர் அப்படி முழக்கம் செய்த போது மாநாட்டு மண்டபம் அதிர்ந்தது. கூடியிருந்தவர்களின் கைதட்டல் வானைப்பிளந்தது. எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி பளிச்சிட்டது.

தமிழ்நாடு அரசின் ஆணைப்படி மாநாட்டுக்குப் பொலீஸார் தடைவிதித் திருந்தும் நீதிமன்றம் அந்தத் தடையை நீக்கி புலிகளைப் பற்றிப் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் மாநாட்டை நடத்த அனுமதி வழங்கியிருந்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் மீது அமைச்சர் ஹக்கீம் பாய்ச்சல்!

அட்டாளைச்சேனை,ஜூலை22

கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே மீண்டும் யுத்தம் மூண்டு விடாது பார்த்துக்கொள்கின்றார்களே தவிர, முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையிட்டுக் கவனம் செலுத்துவதில்லை.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுவினர் மீது குற்றம் சுமத்துகின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

கடந்த சனிக்கிழமை இரவு அட்டாளைச்சேனை ஜும்மாப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் பாதுகாப்பு செயலர் மக்களுக்கு பல வாக்குறுதிகள்!

யாழ்ப்பாணம்,ஜூலை22

- தனங்களப்பு பிரதேசத்தில் உள்ள வயல்களில் மூன்றில் இரண்டு பகுதி நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் அதற்குச் சில கட்டுப்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படும்.
- பனை மரங்களை படையினரோ அல்லது வேறு எவரோ தறிப்பது உடன் தடைசெய்யப்படுகின்றது.
- புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி தென்மராட்சிப் பகுதிக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும்.
- பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மற்றும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இருந்து ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்கு முன் படையினர் வெளியேறுவர்.
- பொதுமக்களின் வீடுகளில் இருந்து படையினர் வெளியேறுகின்றனர். இதுவரை 108 வீடுகளில் இருந்து வெளியேறிவிட்டனர். இன்ன

(13ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரவி கருணாநாயக்காவின்மீது நடவடிக்கை எடுக்கக் காரணம் இல்லை

### ஜனாதிபதியின் கருத்தை விமர்சிக்கிறார் அரச பேச்சாளர்

'அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தகுந்த காரணம் ஏதுமில்லை.

அரச பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தொனியில் ஜனாதிபதி வெளியிட்டிருக்கும் கருத்துத் தொடர்பாக அரச பேச்சாளர் தெரிவித்திருப்பதாவது:-

இந்தக் குற்றச்சாட்டு முழுமையான கற்பனையின் அடிப்படையில் முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமரைக் கொல்வதற்காக ஜனாதிபதி தனது

(14 ஆம் பக்கம் பார்க்க)



உலகத் தமிழர் பேரவை ஆரம்ப நாள் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்....

## பெற்றோலின் விலை குடாநாட்டில் ரூ. 58

குடாநாட்டில் ஒரு லீற்றர் பெற்றோலை 58 ரூபாவுக்கு விற்பனை செய்யும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன சந்தைப்படுத்தும் பிரிவு முகாமையாளர் இதனைத் தெரிவித்தார்.

கப்பல் மூலம் எரிபொருளை எடுத்து வருவதற்கு பெருந்தொகை பணத்தை செலவழிக்க வேண்டியுள்ளது என்றும் -

இதன்காரணமாக எரிபொருளைத் தரைவழியாக எடுத்துவருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும்- அவர் தெரிவித்தார்.

முதல் கட்டமாக பெற்றோல் தரைவழியாக எடுத்து வரப்படுகின்றது என்றும் -

இதனையடுத்து ஒரு லீற்றர் பெற்றோலை 58 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் உள்ள எரிபொருள் களஞ்சியத்தைப் பார்வையிட்டு அதில் எரிபொருளை சேமிப்பது தொடர்பாக ஆராயவிருப்பதாகவும் -

வன்னியில் எரிபொருள் விநியோகத்தைச் சீராக்குவது குறித்தும் ஆராயப்பட இருப்பதாகவும் - அவர் மேலும் கூறினார். (ம-3)

## அமெரிக்காவில் ரணிலுக்கு அதி உச்சப் பாதுகாப்பு!

வாஷிங்ரன்,ஜூலை22

அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அங்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. விசேட விமானத்தில் வாஷிங்ரன் டலஸ் விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் வந்திறங்கிய இலங்கைப் பிரதமரை அமெரிக்க இராஜங்க உயரதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

பிரதமரின் விஜயத்தை முன்னிட்டு விமானநிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. செய்தியாளர் எவரும் விமான நிலையத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை.

விமான நிலையத்திலிருந்து பிரதமர் செல்லும்போது வாஷிங்ரனில் சில முக்கிய வீதிகளைப் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அமெரிக்க அதிகாரிகள் மூடியிருந்தனர்.

நாளைமறுதினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க ஜனாதிபதி

(14 ஆம் பக்கம் பார்க்க)




உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்த மனோகணேசனும் அவரது சகோதரரும்.

## சமாதான முயற்சிகளில் காலதாமதம் ஏற்பட்டால் அரசிலிருந்து விலகிவிடுவேன்

### மனோகணேசன் 'உதயனு'க்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை22

தற்போதைய சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அரசு காலதாமதத்தை ஏற்படுத்தினால், உடனடியாகவே நான் அரசில் இருந்து விலகிக்கொள்வேன்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக தேசிய காங்கிரஸின் அமைப்பாளரும கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்வந்துள்ள எம்பி. மனோகணேசன் தனது கட்சிப் பிரமுகர்கள் சகிதம் நேற்றுப் பிற்பகல் 'உதயன்' அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

தனது யாழ்.விஜயம் மற்றும் எதிர்கால செயற்றிட்டங்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவித்தார்.

இது குறித்து மனோகணேசன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் மட்டுமன்றி மேல்மாகாணமும் தமிழ மக்களின் அரசியல் மையமாகக் கரு

(13 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு



50 ஓட்டங்களைப் பெற்ற மகிழ்ச்சியில் சகார்

## பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் 161

முரளிதரனின் அபாரமான பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி தனது முதல இனிங்ஸில் 161 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

பங்களாதேஷ் - இலங்கை அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுக்காலை சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது.

பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. முத்தையா முரளிதரன் அபாரமாகப் பந்து வீசி 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அவர் 19.4 ஓவர்களில் 39 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து பங்களாதேஷ் அணியின் ஐந்து பேரை வீழ்த்தினார் -

டெஸ்ட் ஆட்டங்களில் முரளிதரன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்துவது இது 35 ஆவது தடவையாகும்.

பங்களாதேஷ் அணியின் கடைசி ஐந்து விக்கெட்டுக்களும் வெறும் 13 ஓட்டங்களுக்குள் வீழந்தன. முரளியும சரித புத்திகவும் இணைந்து இந்த 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்த ஆட்டத்தில் சரித புத்திக் 38 ஓட்டங்கள் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஆரம்பத்தில் ஆடுகளம் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருந்தது. இதனால் 18 ஓட்டங்களுக்குள்ளேயே பங்களாதேஷ் அணி தனது முதல் இரு விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்னர் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஹபிபுள பஸாரும் ஹனன் சாகரும் 57 ஓட்டங்களைப் பெற்று அணியின் நிலையை ஓரளவு நிமிர்த்தினர்.

சாகர் 69 பந்துகளில் 8 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். அவரை சனத் ஜெயசூரியா தனது முதலாவது ஓவரில் முதல் பந்தில் ஆட்டமிழக்கச் செய்தார். எல்.பி.டபிள்யூ முறையில் அவர் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 161 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



முரளி

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக மார்வன் அத்தப்பத்துவும் ரஸல் ஆர்னல்ட்டும் களமிறங்கினர்.

அத்தப்பத்து 20 ஓட்டங்களுடனும் ஆர்னல்ட் இரு பவுண்டரிகள் அடங்கலாக 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

ஆட்டம் இன்றும் தொடர்ந்து இடம் பெறும். (ம)

## அணித்தலைவர் பதவியில் ஜயசூரிய தொடர்ந்து நீடிப்பு



கொழும்பு,ஜூலை22

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் வரை சனத் ஜயசூரிய இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக நீடிப்பார். இவ்வாறு இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உறுதி அளித்துள்ளார்.

இங்கிலாந்து சுற்றுலாவின் போது இலங்கை கிரிக்கெட் அணி படுதோல்விகளைச் சந்தித்தது. டெஸ்ட் தொடரில் 2-0 விகிதத்தில் தோல்வியுற்ற இலங்கை அணி ஒரேயொரு ஒருநாள் போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றது.

இதனால் இலங்கை அணியின், தலைவர் பதவியிலிருந்து சனத் ஜயசூரிய நீக்கப்படலாம் என ஊகங்கள் வெளியாகின.

இந்நிலையில், அணித் தலைவர் சனத் ஜயசூரிய, பயிற்றுநர் டேவ் வட்மோர் மற்றும் தேர்வுக் குழுவினரை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெள்ளியன்று சந்தித்தார். இச்சந்திப்பின் போதே, மேற்படி வாக்குறுதியை அமைச்சர் வழங்கியுள்ளார்.

"தோல்வியும் விளையாட்டின் ஒரு பகுதியே, ஒவ்வொரு தடவையும் நாம் வெற்றி பெறமுடியாது. இதை ஒரு தற்காலிக பின்னடைவாகக் கருதி அடுத்து நடைபெறவுள்ள முக்கிய சுற்றுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவதற்கு உறுதிபூண வேண்டும்.

"ஐ.ஐ.சி.யினி உலகக் கிண்ணப் போட்டி, 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் வெற்றிபெற்று இழந்த பெருமையை இலங்கை மீண்டும் அடைய முயற்சியுங்கள்". - இவ்வாறு சனத் ஜயசூரியாவிடம் அமைச்சர் கூறியுள்ளார்.

"மேற்படி பின்னடைவுகள் இச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுள்ளமை தொடர்பாக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இத்தோல்விகள் மூலம் எமது தவறுகளைக் கண்டறிந்து, அவற்றை உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன் திருத்திக் கொள்ள அவகாசம் கிடைத்துள்ளது". - இவ்வாறு அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

பயிற்றுநர் டேவ் வட்மோரிடம் அமைச்சர் பேசுகையில் -

"இங்கிலாந்தில் ஏற்பட்ட தோல்விகளை மறந்து விட்டு, உலகக் கிண்ணத்தை வெல்லக் கூடிய அணியை உருவாக்குங்கள்" என்று கூறியுள்ளார்.

## 12 வருடங்களின் பின்னர்
# அனலைதீவு சென்ற புலிகளுக்கு உணர்வுபூர்வமான வரவேற்பு!

ஊர்காவற்றுறை,ஜூலை22

பன்னிரண்டு வருட இடைவெளிகளுக்குப் பின்னர் நேற்று நண்பகல் அனலைதீவிற்கு வருகைதந்த விடுதலைப் புலிப்போராளிகளுக்கு அப்பகுதி மக்கள் உணர்வுபூர்வமாக வரவேற்பளித்தனர்.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் 3 போராளிகள் நேற்று அனலைதீவிற்கு வருகை தந்திருந்தனர்.

போராளிகளை எதிர்பார்த்து நேற்று நண்பகல் அளவில் இறங்குதுறையில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் காத்துநின்றனர்.

நண்பகல் 12 மணியளவில் போராளிகள் அனலைதீவு இறங்குதுறையை வந்தடைந்ததும், அங்கிருந்து மேள வாத்தியங்களுடன் சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள அனலைதீவு ஐயனார் ஆலயத்திற்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆலய முன்றிலில் பூரண கும்பம் வைக்கப்பட்டு ஆலயச்சூழலில் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கூடிநின்று வரவேற்பளித்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆலய முன்றிலில் அனலைதீவு கிராமசேவகர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் அரசியல்துறையைச் சேர்ந்த அருந்தவன், தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இதேவேளை -

விடுதலைப் புலிகளின் அரசியல் பணிக்குழுவினர் ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் இறங்குதுறை மூலமே அனலைதீவுக்குச் செல்ல ஏற்பாடாகியிருந்தது. எனினும், இறுதி நேரத்தில் மேற்படி துறைமூலம் புலிகள் பயணஞ்செய்ய கடற்படையின் அனுமதி வழங்கவில்லை என்றும் -

இதனால் அங்கிருந்து புங்குடுதீவு ஊடாக குறிகாட்டுவான் சென்றடைந்த விடுதலைப் புலிகள் கூ.ச. படகு மூலம் அனலைதீவு சென்றடைந்தனர் எனவும் - கூறப்பட்டது. (எ-16)

## அதிரடிச் சோதனையில் 1,728 பஸ்கள் சிக்கின
### சேவைக்குத் தகுதியற்றவையாம்

கொழும்பு,ஜூலை22

சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தகுதியற்ற 1,728 பஸ்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றின் அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

மேல் மாகாணத்தில், மேல் மாகாண சபையும் மேல் மாகாண வீதி - பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையும் இணைந்து நடத்திய திடீர் சோதனையின்போதே இந்த பஸ்கள் சிக்கின.

மேல் மாகாணத்தில் அதிகரித்து வரும் விபத்துக்களைக் குறைப்பதற்காகவும் மக்களுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காகவுமே இவ்வாறான அதிரடிச் சோதனைகள் நடத்தப்படுகின்றன என்றும் தொடர்ந்தும் சோதனைகள் நடத்தப் படும் என்றும் மேல் மாகாணசபைப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். (ம)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ காலை 8.30 மணி- யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி

☆ மாலை 4 மணி - யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி புளுஸ்.

## சமய சந்திகளில்

சாவகச்சேரி,ஜூலை22

சாவகச்சேரி பெரியமாவடி 'வித்தகம்' தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் கணபதி ஹோமம் நடைபெறவுள்ளது. நண்பகல் மாகேஸ்வர பூசையும் இடம் பெறும். (எ-31)

☆ ☆ ☆

சாவகச்சேரி,ஜூலை22

கைதடி வீதியோர கைத்தறி விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிமுதல் அகத்தியர் தோத்திர திரட்டு முற்றோதல் நடைபெறவுள்ளது. (எ-31)

## ஜெனரல் ரொண்ட் புருகோவிட் அடுத்தவாரம் வன்னி செல்வார்

கிளிநொச்சி,ஜூலை22

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல போக்குவரத்து தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக சர்வதேச யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் அடுத்த வாரம் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் கடற்புலிகளின் தலைவா சூசை உட்பட பலருடன் புருகோவிட் பேச்சுக்களை நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## வீடுகளிலிருந்து படையினர் உடன் வெளியேற வேண்டும்
### மகேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை22

குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ள வீடுகளில் இருந்து உடன் வெளியேறி பொதுமக்களிடம் அந்த வீடுகளைக் கையளிக்கவேண்டும்.

- இப்படிக் கோரிக்கை விடுத்தார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

சாவகச்சேரியில் நேற்ற நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலரிடம் கோரினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் மக்களுடன் படையினர் இருக்கத் தேவையில்லை என்பதைப் பிரதமர் ஏற்றிருக்கிறார். எனவே, பொதுமக்களின் இருப்பிடங்களில் இருந்து படையினர் வெளியேறி அரச காணிகள் அல்லது ரயில் நிலையங்களில் படையினர் தங்கலாம்.

இன்று வடக்கு - கிழக்கில் மட்டும் அன்றி நாடு எங்கும் புலிகள் சென்றுள்ளனர். வடக்கு - கிழக்கில் அலுவலகங்களைத் திறந்துள்ளனர். அவர்களால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. அப்படியிருக்கும்போது ஏன் புதிய முகாம்களைப் படையினர் அமைக்கின்றனர் என்று தெரியவில்லை.

குடாநாட்டில் மூடப்பட்டுக் கிடக்கும் வீதிகள் யாவும் உடன் மக்கள் போக்குவரத்துக்குத் திறக்கப்பட வேண்டும் - என்றார். (ம-3)





நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் அமர்ந்துள்ளதைப் படத்தில் காணலாம்.

# இலங்கைத் தம்பதி உட்பட 8பேர் சிசிலி ரயில் விபத்தில் உயிரிழப்பு!

லண்டன்,ஜூலை22

இத்தாலி அருகேயுள்ள தீவான சிசிலியின் நகரான மெசினாவில் இடம்பெற்ற ரயில் விபத்தில் இலங்கைத் தம்பதிஉட்பட குறைந்தது 8பேர் உயிரிழந்தனர்; 12பேர் வரை காயமடைந்துள்ளனர்.

200 பயணிகளுடன் சென்ற இந்த ரயில் தடம்புரண்டு பாலம் ஒன்றில் மோதிக் கவிழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ரயிலின் 7பெட்டிகள் பாலத்தின் கீழ் இருந்த கழிவு நீர் வாய்க்காலுக்குள் வீழ்ந்தன.

நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 7மணிக்கு ரொமேட்டர் மரியா ரயில் நிலையத்துக்கு அருகே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் ரயிலின் சாரதி ஒருவரும் உயிரிழந்தார். இறந்த மற்றவர்களில் இலங்கையைச் சேர்ந்த கணவன், மனைவி, சிசிலிய பெண் மணி 76 வயதான முதியவர் ஆகியோர் அடையாளம் காணப்பட்டனர். மேலும் மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

விபத்துக்குள்ளான ரயில் சிசிலி மாகாண தலைநகர் பல்ர் மோவிலிருந்து வெனிஸ் நகரத்துக்கு சென்று கொண்டிருந்தது.

ரயிலின் மற்றொரு சாரதியும் குழந்தை ஒன்றும் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சேதமடைந்த ரயில் பெட்டிகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிக்ள் தொடர்ந்து வருகின்றன. (ஒ)



விபத்துக்குள்ளான ரயில்

# பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு புதிய தலைவர் நியமனம்

## பெனாஸிர் நடவடிக்கை

இஸ்லாமாபாத்,ஜூலை22

பெனாஸிருக்குப் பதிலாக பாகிஸ்தான் மக்கள் கட்சிக்குப் புதிய தலைவர் தேர்வு செய்யப்பட இருக்கிறார். முஷாரப்பின் திட்டத்தை முறியடிப்பதற்காக பெனாஸிர் இந்தப் புதிய வியூகத்தையமைக்கிறார்.

பாகிஸ்தானில் ஒக்ரோபர் மாதம் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் தேர்தலில் 2 முறை பிரதமராக இருந்தவர்கள் போட்டியிடத் தடைவிதிக்கும வகையில் அதிபர் முஷாரப் சட்டத் திருத்தம் கொண்டுவந்து இருக்கிறார்.

பெனாஸிர் ஏற்கனவே 2 முறை பிரதமராக இருந்து இருக்கிறார். புதிய சட்டம் அவரைத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தடுக்கிறது. எனவே தனது பாகிஸ்தான் மக்கள் கட்சியைக் களத்தில் இறக்குவதற்காக பெனாஸிர் புதிய வியூகம் அமைத்து வருகிறார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு பெனாஸிர் தற்போது தலைவராக இருக்கிறார். அதில் இருந்து விலகி புதிய தலைவரை நியமிக்க அவர் முடிவு செய்து இருக்கிறார்.

லண்டனில் தங்கி இருக்கும் பெனாஸிர் இதுபற்றி கட்சி முன்னணித் தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். கட்சியின் துணைத் தலைவர் மக்டூம் அமின் பாகிம், சயீத் நவீத் காமர், காயிம் அலிஷா, அப்தாப்மிரானி ஆகியோர் பெயர்கள் தலைவர் பதவிக்கு அடிபடுகிறது. (ஒ)

# பிரெஞ்ச் மொழிபெயர்ப்பில் தமிழ்ச் சிறுகதைகள்

லண்டன்,ஜூலை22

சிறந்த தமிழ்ச் சிறுகதைகள் பிரெஞ்ச்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு ஒரு தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சிறுகதைகளின் பிரெஞ்ச் மொழிப்பெயர்ப்பு நூல் வெளியாவது இதுவே முதல் முறை. இது இரு மொழிகளின் வரலாற்றில் ஒரு மைல்கல் எனக் கருதப்படுகிறது.

பிரெஞ்சுக்காரரான டாக்டர் பிராங்காயிஸ் கிராஸூம், இந்தியாவைச் சேர்ந்த ஆய்வாளர் எம்.கண்ணனும் இணைந்து தமிழ்க் கதைகளைத் தேர்தெடுத்து, பிரெஞ்ச் மொழியில் மொழிபெயர்த்து, 'நாகலிங்க மரம்: தென்னிந்தியச் சிறுகதைகள்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர்.

'சிறுகதை மன்னனான புதுமைப்பித்தனில் தொடங்கி, தற்காலச் சிறுகதை எழுத்தாளரான வேலராமமூர்த்திவரை பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த இலக்கியவாதிகளின் சிறுகதைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

1935ஆம் ஆண்டிலிருந்து 1995ஆம் ஆண்டு வரை வெளியாகியுள்ள சிறுகதைகளில் தேர்ந்தெடுத்த 20 கதைகள் அந்நூலில் இடம்பெற்றுள்ளன. இதில் உள்ள பல கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுவதற்கு முன், பிரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# அமெரிக்கப் படைக்கு நிறம் மாறும் சீருடை

வாஷிங்டன்,ஜூலை22

நிலப்பகுதிகளின் தன்மைக்கு ஏற்றவகையில் நிறம் மாறக்கூடிய சீருடைகளை அறிமுகம் செய்ய அமெரிக்க ராணுவம் திட்டமிட்டுள்ளது.

வெப்பம் மற்றும் குளிரைக் கட்டுபடுத்தவல்ல சாதனங்கள் இந்த சீருடைகளில் பொருத்தப்பட்டு இருக்கும். ராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி, பாதுகாப்புத்துறை செய்தி ஏடு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மழை, பனிபொழிவு, அணு, இரசாயன, உயிரி ஆயுதங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இந்த சீருடைகள் உதவும். அடுத்த ஆறு ஆண்டுகளில் இது பயன்பாட்டுக்குவரும்.

ராணுவ வீரர்களின் இதயத்துடிப்பு, உடல் வெப்பநிலை, ஓய்வெடுக்கும் நேரம், களைப்படையும் நேரத்தை கண்காணிக்கவல்ல நுண்ணிய சாதனங்களும் இந்த சீருடையில் இருக்கும். இதன் மூலம் வீரர்களின் உடல மற்றும் உளவியல் தகுதியை மருத்துவர்கள் அறிய முடியும். (ஒ)

# இஸ்ரேலிய தலைநகரில் குண்டுவெடிப்பு!

டெல்அவிவ்,ஜூலை22

இஸ்ரேலில் பயணிகள் ரயில் மீது நேற்றுக்காலை நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் ரயில் சாரதி காயமடைந்தார்.

டெல்அவிவின் தெற்குப் பகுதியில் உள்ள யாவ்னி என்றஇடத்தை ரயில் தாண்டிய சமயம், தண்டவாளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததிலேயே ரயில் சாரதி காயமடைந்தார். (ஒ)

# மருந்துகளின் செயல் திறனை அதிகரிக்க உதவும் கோசலம்

## பிரிட்டிஷ் மருத்துவ இதழ் தகவல்

பாரீஸ்,ஜூலை22

பல்வேறு நோய்களுக்கு உட்கொள்ளும் மருந்துகளின் செயல்திறனை அதிகரிக்கும் தன்மை 'கோசலம்' எனப்படும் பசுவின் சிறுநீருக்கு உள்ளது. எனவே கோசலத்தை உட்கொள்வோர் மருந்தின் அளவைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

இத்தகவலை பிரிட்டனில் உள்ள வேதியியல் தொழில் சங்கத்தின் வெளியீடான 'வேதியியல் மற்றும் தொழில்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

மருந்துகளைக் கிரகிக்கக்கூடிய மனிதக் கலங்களின் திறனை கோசலம் அதிகரிப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பான அமெரிக்கக் காப்புரிமையையும் அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மருந்தைக் கிரகிக்கும் கலத்தின் திறன் அதிகரிக்கப்படுவதால், குறைந்த அளவு மருந்திலேயே தேவையான பலனைப் பெறமுடியும். புற்றுநோய், காசநோய் போன்ற நோய்களுக்காக மருந்துகளைக் குறைவாக உட்கொள்வதால் மருத்துவச் செலவும் குறையும். அத்துடன் மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகளையும் குறைக்கவல்லது கோசலம் என்று அந்த இதழுக்கு அளித்துள்ள பேட்டியில், இந்திய அறிவியல், தொழில்நுட்பத்துறை அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி கூறியுள்ளார்.

புற்றுநோய், காசநோய்க்கான மருந்துகளின் கிருமிகளை அழிக்கும் திறனை இரண்டிலிருந்து 20 மடங்குகளும், பக்டீரியா எதிர்ப்பு மருந்துகளின் திறனை இரண்டிலிருந்து 80 மடங்குகள் வரையும் கோசலம் அதிகரிக்கச் செய்வதாக அந்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# 65அடி ஆழக் குழியில் விழுந்து 8 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

## தமிழகத்தில் சம்பவம்

குழாய்க்கிணறு தோண்டியதால் ஏற்பட்ட 65அடி ஆழக் குழியில் விழுந்துவிட்ட 8வயதுச் சிறுவனை மீட்க 6மணிநேரம் போராடியும் இறுதியில் அச்சிறுவனின் சடலத்தைத் தான் மீட்க முடிந்தது.

இந்த பரிதாப சம்பவம் தமிழகத்தின் காஞ்சிபுரம் அருகே பாலுச்செட்டி சத்திரத்தை அடுத்த தைப்பாக்கம் கிராமத்தில் நடந்து இருக்கிறது.

அங்குள்ள அண்ணாமலை என்பவரின் நிலத்தில் நேற்றுமுன்தினம் குழாய்க்கிணறு தோண்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

65அடி ஆழத்துக்கு துளை போட்டதும் மதிய சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது. குழியின் மேல்பாகத்தை சாக்கால் மூடிவிட்டு தொழிலாளர்கள் சாப்பிடச் சென்றுவிட்டார்கள.

அந்தச் சமயம் 8வயதுச் சிறுவனான ராம்குமார் அங்கு ஆழமான குழி இருப்பதை கவனிக்காமல் சாக்கின் மீது கால் வைத்துவிட்டான். உடனே குழிக்குள் விழுந்தான்.

இந்தச் சிறுவன் அங்கு வேலை செய்த மணி என்பவரின் மகன் ஆவான். சாப்பிட்டு முடித்து வந்த ஊழியர்கள், குழி மீது சாக்கு இல்லாதது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அப்போது தான் சிறுவன் உள்ளே விழுந்து இருப்பது தெரிந்தது. சிறுவன் 20 அடி ஆழத்தில் அந்தரத்தில் இருப்பது தெரியவந்தது.

இரவு 9.15மணி அளவில் 20அடி ஆழம் தோண்டி முடிக்கப்பட்டது. பக்கவாட்டில் சுரங்கம் போட்டு சிறுவன் இருந்த இடத்தை கண்டுபிடித்தனர். சிறுவன் மீது மண் சரிந்துவிடாத முறையில் அவனை மீட்டனர். சிறுவன் மூச்சுப் பேச்சு இல்லாமல் மயங்கிய நிலையில் இருந்தான். அவனை உடனடியாக காஞ்சிபுரம் அரச ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றனர்.

இரவு 9.30மணியில் இருந்து 10 மணிவரை 30 நிமிடநேரம் சிறுவனைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராடினர். ஆனால் சிறுவனின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.(ஒ)

கிணற்றுக்காகத் தோண்டப்பட்ட குழி (உட்படம்: உயிரிழந்த ராம்குமார்.)



# கேளிக்கை விடுதியில் தீவிபத்து; 24பேர் பலி!

## பெருவில் அனர்த்தம்

லிமா,ஜூலை22

பெரு நாட்டுத் தலைநகர் லிமாவின் கேலிக்கை விடுதியொன்று தீப்பற்றி எரிந்ததில் 24பேர் உடல் கருகி இறந்தனர்.

நேற்று அதிகாலை 3மணியளவில் சுர்கோ பகுதியில் உள்ள, 'உடோபியா' என்ற இரவு நேர கேளிக்கை விடுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

திடீரென்று மூண்ட தீ சில நிமிடங்களுக்குள் விடுதியின் பல பாகங்களுக்கும் பரவி விட்டதாகவும் -

அந்தச் சமயத்தில் விடுதிக்குள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்ததாகவும் -

இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

'கேலிக்கை விடுதியின் ஆண்டு விழாவையொட்டி கோலாகலமான கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்தச் சமயம் பணியாளர்கள் தீயை வைத்து வேடிக்கை காட்டினார்கள். அப்போது திரைச் சீலைகளில் தீப்பற்றிக்கொண்டது. அங்கிருந்தவர்கள் தீயை அணைப்பதற்கு தண்ணீர் கிடைக்காததால் அங்கிருந்த மது வகைகளை ஊற்றியுள்ளார்கள். இதனால் தீ மேலும் பற்றி எரிந்தது.'

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீயில் இருந்து உயிர் தப்ப சிலர் இரண்டாவது மாடியில் இருந்து குதித்ததாகவும் -

இதில் பலர் காயமடைந்ததாகவும் -

கேலிக்கை விடுதி இருந்த கட்டடத்தில் அவசரகால வழிகள் உட்பட எந்த வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருக்கவில்லை என்றும் -

தீ அணைப்புப் படையினர் கூறினர். (ஒ)

# சுற்றுலாப் பயணிகளில் சிறந்தவர் ஜேர்மனியரே!

## கருத்துக்கணிப்பில் தகவல்

லண்டன்,ஜூலை22

உலகில் உள்ள முக்கியமான நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளில் சிறந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிய கருத்துக்கணிப்பு நடந்தது. சுற்றுலா நிறுவனம் ஒன்று நடத்திய இந்த கருத்துக்கணிப்பில் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் சிறந்த சுற்றுலா பயணிகள் என்ற தகவல் வெளியானது.

பழகும் விதம், மொழிகளை அறிந்து கொண்டு தகவல் தொடர்பு பரிமாற்றம் செய்து கொள்ளுதல் ஆகியவற்றில் ஜேர்மனியர் முன்னணி வகிக்கிறார்கள். அடுத்தபடியாக அமெரிக்கர்கள் உள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளில் மிக மோசமானவர்கள் என்ற பெயர் பிரிட்டிஷாருக்கு கிடைத்துள்ளது. இவர்கள் சுற்றுலாவின்போது உள்ளூர் மொழிகளை புரிந்து கொள்ளவும், பேசவும் முயற்சி செய்வதில்லை. மேலும் சுற்றுலா செல்லும் இடங்களில் கடுமையாகவும் பிரிட்டிஷார் நடந்து கொள்வதாகவும் தகவல் வெளியானது. (ஒ)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு சோதனைகள் ஏற்பட்டுவிடுமா?

## அரசுக்கு ஆபத்து வராது காக்க தமிழ்த் தரப்பு முஸ்தீபு

விடுதலைப் புலிகளின் மூதூர் அலுவலகம் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டதில் ஆரம்பித்த கிழக்கு மாகாண மோதல்களின் பின்னணி பற்றி ஆராயப்படும் தருணம் இது.

ஆயினும் கலவரங்களின் பின்விளைவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. முஸ்லிம் காங்கிரஸுக்குள் பூசல், பிளவுபடக்கூடிய ஆபத்து என்றெல்லாம் தகவல்கள் வெளியாகின.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும விடுதலைப் புலிகளின் தலைவரும் ஒரு புரிந்துணர்வுடன நடந்து கொள்வதற்கெதிராகக் குரல்கள் பலமாக எழுந்துள்ளன.

ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை பிரபாகரன் அமுல் நடத்த வேண்டும் என்ற சுலோகத்துடன் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையும், ஏனைய மட்டங்களும் தமது அடுத்த நடவடிக்கை பற்றி யோசித்து வருகின்றன.

இதன் தாக்கம் அரசாங்கத்தின் நிலையைச் சிறிது அதிரவைத்திருக்கலாம்.

அதேவேளை, அரசாங்கத்தை இக்கட்டான நிலைமைக்கு தள்ளினால் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளை முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து ஆதரிக்கும் என்ற அறிக்கைகள் தலைவரின் வாயினால் வெளிவந்துள்ளன.

அரசாங்கம் கொண்டுவரும் மனசாட்சிப்படி வாக்களிக்கும்' சட்டமூலத்திற்கு ஆதரவை நிறுத்தும் யோசனையும் முகாவிடம் பலமாக உள்ளது.

ஒரு சில எம்.பிக்களின் பெரும்பான்மையில் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் ஐதே.மு.அரசாங்கம் தானாகவே வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டால் என்ன நடக்கும்?

ஓராண்டு முடிவில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவாரா என்ற ஏக்கத்துடன் நாள்களை எண்ணிவரும் ஐ.தே.மு., அதற்கு முன கவிழ்ந்துவிட்டால் சமாதான முனைெடுப்புகளின் கதி என்ன என்ற ஆதங்கம் பலர் மனங்களில் எழுந்துள்ளது.

இந்நிலையில் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டால் தாம் கை கொடுப்போவதாக தமிழர் தரப்பு எம்.பிக்கள் விருப்பம் வெளியிடுகின்றனர். தமக்கு அது தார்மீகக் கடமை எனவும் விமர்சிக்கின்றனர்.

இவற்றிற்கிடையே கிழக்கு மாகாண வன்செயல்கள், கலவரங்கள், அவற்றிற்கான தீர்வுபற்றி உரையாடும் நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களை ஜனாதிபதி அழைத்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவளிக்கும் என்று ஒரு சம்பிரதாயத்திற்காக அடிக்கடி அறிக்கைகள் வெளியிட்டு வந்தாலும் சமாதானம் பற்றிய ஜனாதிபதியின் அந்தரங்க சுத்தி சந்தேகத்திற்கிடமானது.

"தமிழர்களுக்கு சில குறைகள் உளஎன. அவற்றை ஓரளவு அதிகாரப் பரவலாக்கத்துடன் நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும்" என்ற எண்ணம் மாத்திரம் கொண்டவர் ஜனாதிபதி.

அவர் தமிழ் தேசியம் பற்றியோ, அவர்களின் தாயகம் பற்றியோ அக்கறை கொண்டவரல்லர் என்று புலிகளின் முக்கியஸ்தர்களால் விமர்சிக்கப்பட்டுவருபவர்.

இக்காரணங்களாலேயே சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுபவராக ஜனாதிபதி இருக்கிறார்.

இடைக்கால நிர்வாகம் இப்போது தேவையில்லையென்றும், புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது என்றும் அவர் நிபந்தனைகள் இட்டு வருவது இதனையே காட்டுவதாக புலிகளின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

முட்டுக்கட்டை போடுவதற்கு விரும்புபவர்களும்சரி, ஆப்புவைக்க விரும்பும் அரசியல்வாதிகளும் சரி அதற்கான வாய்ப்புக்களை பயன்படுத்தவே செய்வர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஆப்புவைக்க முனைந்துள்ள சக்திகளின் வால் எது, தலை எது என்பது எவருக்[illegible] தெரியாது. ஆனால், அதனால் [illegible]மடைபவர்கள் எத்தரப்பினர் [illegible]து பலரும் அறிந்ததே.

முஸ்லிம்களின் தரப்பில் நியாயங்களை வரிசைப்படுத்தி அடித்துக் கூறுபவர்கள் காத்திரமான இரண்டு விடயங்களை வலியுறுத் துகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் விதத்திலான திருத்தங்கள் செய்யப்படவேண்டும். முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றக்கூடாது.

மேற்படி கோரிக்கைகள் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டிருப்பதும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் புலிகளுக்குமிடையே எட்டப்பட்டிருப்பதுமான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை 'மஃரி பரல்' ஏவுகணைகளால் தாக்கும் வல்லமை கொண்டவை.

அதாவது புலிகள் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்கி அணைத்துச் செல்பவர்கள் என்ற நம்பிக்கையை ஊறு செய்வதாக அது அமைகிறது.

இந்த நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் தாய கக் கனவு மட்டுமல்ல இடைக்கால நிர்வாகமே கேள்விக்குறியாகிவிடமுடியும். இவற்றின் தொடர்ச்சியாக புரிந்துணர்வு ஒப பந்தமும் பாதிப்படையக்கூடும்.

இராணுவ முகாம்கள் புதிய நிலைகளுக்கு அகற்றப்படும் வேகம் பற்றி புலிகள் அதிருப்தி கொண்டுள்ளனர். இதனால் தாய்லாந்தின் பேச்சுக்களுக்கு திகதி குறிப்பிடமுடியாத சங்கடநிலை ஏற்பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து எதிர்ப்பு இல்லாவிட்டாலும்கூட பேச்சுக்கள் முட்டுக்கட்டை நிலைக்குள்தான் இருக்கின்றன.

முஸ்லிம் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றாமல் விடும் எண்ணங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படுமாயின் அது பேச்சுக்களுக்கு நிரந்தர முட்டுக்கட்டையாகவும் ஆகிவிடலாம்.

முஸ்லிம்கள் தமது பாதுகாப்புப் பற்றிச் சுதந்திரமாக முடிவுசெய்வது தவறென்று ஆகிவிடாது. ஆனால், வன்செயல்கள் திடீரென வெடித்ததும் அதன்பின்னரே இக்கோரிக்கை விடுக்கப்படுவதும் இவற்றின் பின்னணியில் ஏதோ இருப்பதாகச் சிந்திக்க வைக்கிறது.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் பாதுகாப்பை பற்றிச் சிந்திக்கிறார்கள் என்னும் வரிகளும் பத்திரிகைளில் காணப்பட்டன. இவற்றிற்கு ஆழமான பின்னணிகள் இருக்குமா என்பது பற்றியும் ஆலோசிக்க இடமுண்டு.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆக்கியதும் அழித்ததும் முஸ்லிம் காங்கிரஸ் என்பது வரலாறு. இன்றைய அரசாங்கத்தை ஆக்கி, அதனைத் தக்கவைத்துக கொணடிருப்பதும் அதுவே.

கட்சிநலன்கள் எப்படிப் போனாலும் போகட்டும் என்று பதவிகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கும் தேவை இன்றைய சிறுபான்மைக் கட்சிகளுக்கு இல்லை.

தேர்தல் முறை சிறிய கட்சிகளுக்கு பெரும் முக்கியத்துவத்தைக் கொடுத்து வைத்திருக்கிறது. இதனால் அமைச்சர் ஹக்கீமுக்கு மட்டுமல்ல அமைச்சர் தொண்டமான் போன்ற கட்சித் தலைவர்களுக்கும் இருபெரும் தேசிய கட்சிகள் மத்தியில் மதிப்பு அதிகம்.

அமைச்சர் தொண்டமான் மேல் கொத்மலைத் திட்டத்தை வீட்டோ செய்திருக்கிறார். அமைச்சர் ஹக்கீமிடமும் வீட்டோ அதிகாரம் கையில் இருக்கிறது என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

*(நன்றி:சுடர் ஒளி)*

## பலாலிப் பகுதியில் மீள்குடியமர பலர் விருப்பம்

அச்சுவேலி,ஜூலை22

பலாலிப் பகுதியில் மீளக்குடியேறுவதற்கு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பதிவுசெய்துள்ளன.

பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அறிவித்தலின் பிரகாரம் கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை ஆவரங்கால் சிவன் கோயில் வீதியில் கூடிய குடும்ப உறுப்பினர்கள் இதற்கான பதிவுகளைச் செய்துள்ளனர்.

பலாலி வடக்கு, பலாலி கிழக்கு, பலாலி தெற்கு, பலாலி மேற்கு, பலாலி வடமேற்கு ஆகிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மக்கள் மீளக்குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்து பதிவுகளைச் செய்துள்ளனர்.

பலாலிப் பகுதி மக்கள் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இடம்பெயர்ந்தனர். அதன்பின்னர் 12 வருடங்கள் அகதிகளாக அலைந்து பல துன்பங்களை அவர்கள் அனுபவிக்கின்றனர் என பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் கந்தையா தெரிவித்தார்.

(ஒ-11)

## சிப்பாய் சுட்டுக்கொலை

கொழும்பு,ஜூலை22

மதவாச்சி புனானை இராணுவ முகாம் முன்பாக வைத்து நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொலைப் பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட சிப்பாய்க்கும், அவரது தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக தந்தையே மகனைச் சுட்டுக் கொன்றார் என்றும் -

அதன்பின்னர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்ய முயன்ற தந்தை, ஆபத்தான நிலையில் மதவாச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-3)


தெய்வமாகிய தாயே

### 31ஆம் நாள் நினைவில்

மண்ணில் 30 - 10 - 1924



விண்ணில் 22 - 06 - 2002

### திருமதி பொன்றோஸ் எலியாஸ்

அம்மா, நின் அருள்வாழ்வின் அர்த்தங்கள் பெரிதே...
அறிவோடு மனிதை அழகாக்கும் அன்பால்
நிறைவான வாழ்வில் எமைக்காத்து நின்றீர்
உறவுகள் நீளும் உன்னதப்பணிகளால்
உலகத்து மனங்களை வென்றீர் - இன்று
தெய்வமாய் வாழ்கின்றாய் தாயே!
உன் நினைவொன்றே
இனி வாழ்வு தாயே!

அன்னாரின் 31ஆம் நாள் இரங்கல் திருப்பலி இன்று (22. 07. 2002) திங்கட்கிழமை காலை 6. 30மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

*41, மடம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (6247)

உங்கள் நினைவுடன்,
**குடும்பத்தினர்.**



யாழ். வரும் உல்லாசப் பயணிகளுக்கு

**ஒரு நற்செய்தி!**

வெலிங்டன் சந்திக்கு அருகில் இல. 54, மணிக்கூண்டு வீதியில்
உங்களுக்கு ஏற்ற வசதிகளுடன்
**யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி**
திறந்துவைக்கப்பட்டுள்ளது.

**JAFFNA TOURIST INNS,**
**NO. 54, CLOCK TOWER ROAD, JAFFNA.**
**(NEAR WELLINGTON JUNCTION)**

(6242)


## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை சந்திரசேகரம்

யாழ்.கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் (08.07.2002) திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காசிப்பிள்ளை - நாகரட்ணம் தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின் (இராசாத்தி) அன்புக் கணவரும் சுகந்தன், கஜந்தன், சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி (இந்தியா), குணசேகரம் (லண்டன்), ஞானராணி, சற்குணராணி, வசந்தராணி (வவுனியா), பத்மராணி, காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் உதயராணி (இந்தியா), யோகராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2002) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) பிரான்ஸில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தந்தை: காசிப்பிள்ளை (வவுனியா),
சகோதரி: கு.பத்மராணி (யாழ்.).

*214, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
லண்டன் T.P.: 0044-07904219397
பிரான்ஸ் T.P.: 0033-0164682790

(6240)

### திருமதி தம்பிராசா அன்னலட்சுமி

காங்கேசன்துறை வீதி, இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி தம்பிராசா அன்னலட்சுமி நேற்று (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குமாரு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் தம்பிராசாவின் (மன்னார் எக்ஸ்பிரஸ், சுன்னாகம் கண்ணன் அரிசியாலை உரிமையாளர்) அன்பு மனைவியும் பாதுஷா (இந்தியா), பகீரதன், காலஞ்சென்ற ஸ்ரீதரன், தவேந்திரன் மற்றும் சிவேஸ்வரன் (சிவா), வாசுகி (கனடா), சுகந்தி (கனடா), ஜெயந்தி (கனடா), ராஜன் (சுதர்சன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தநடராஜா (சுவிஸ்), ஸ்ரீரஜனி, சரோஜினி, ஈஸ்வரன் (கனடா), சிவா (கனடா - சிவாஸ் ரேடிங்), சிவம் (கனடா), வதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌசல்யா (இந்தியா), மாயவன் (இந்தியா), தர்ஷன், சயந்தன், கோபி, கீர்த்தி, ஜனகன், சீவகன, ஸ்ரீராம், சோபிதா, கல்பனா (கனடா), விஷ்ணு (கனடா), லக்சுமி (கனடா), மீனாட்சி (கனடா), வர்மன் (கனடா), அக்ஷயன் (கனடா), சுரம்யா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பிராசா
*(மன்னார் எக்ஸ்பிரஸ் உரிமையாளர்)*

*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில்.* (6252)





**க்ராக் க்ரீம்**

**அனைத்து க்ராக் க்ரீமுடன், போரோசொப்ட் 5கிராம் பக்கெட் இலவசம்**

'க்ராக் க்ரீம்' வலி, எரிச்சல் இரத்தக்கசிவு, வீக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து இழந்த ஈரத்தை மீட்டு வெடிப்புக்களை நிரப்புகிறது. இதன் சிறப்பு ஆயுர்வேத EH formula எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் 14கே நாட்களில் வெடிப்புக்களை நிரப்பி பாதங்களை அழகுபடுத்துகிறது. தொடர்ந்து பாவிப்பதன் மூலம் திரும்பத் திரும்ப வருவதை தடுக்கலாம்.

ஏக விநியோகஸ்தர்:- **JEGHAN PHARMACY**
NO.462/B, HOSPITAL ROAD, JAFFNA.. TEL.021-2194, 3191

(சி-23016)

உதயன்

## அமைச்சரவை அரசியல்

ஒரு மாற்றுக் கட்சியின் அரசோடு இணைந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி காலம் தள்ளுவது எவ்வளவு கஷ்டமானது என்பதற்கு தற்போதைய அரசியல் நிலைமை நல்ல உதாரணம்.

1978இல் தற்போதைய அரசமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டபோதே இத்தகைய நிலைவரம் வரலாம் என்று எச்சரிக்கப்பட்டது.

தன்னை ஜனநாயக வழியிலான ஓர் அரசியல் சர்வாதிகாரி ஆக்கிக்கொள்வதற்காக இத்தகைய அரசமைப்பை அப்போது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டுவந்தார்.

இந்த அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிரதமரும் அமைச்சர்களும், அரசும் இன்னொரு கட்சித் தரப்பாகவும் வர வாய்ப்புண்டு. அப்படி வந்தால் நாட்டின் ஆட்சி நலைமை விபரீதமாகும் என்று அப்போதே எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி மற்றும் அரச அதிகாரம் ஆகிய இரண்டையும் தனது கைக்குள் வைத்திருந்த ஜெயவர்த்தனா, அந்த எச்சரிக்கைகள் குறித்து அலட்டிக்கொள்ளவில்லை.

ஆனால், அன்று எச்சரித்த நிலைமை இன்று வந்துவிட்டது. அமைச்சரவைக்கு தலைவர் என்று கூறிக்கொள்ளும் ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் தலைகாட்டுவதே கஷ்டமான - நெருக்கடியான - விடயமாகிவிட்டது.

1994இலும் இது போன்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. சுமார் மூன்றுமாத காலம் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் தலைமையின் கீழ் அப்போதைய பிரதமர் சந்திரிகாவின் அமைச்சரவை கூடவேண்டிய நிலை உருவானது. டி.பி.விஜேதுங்க சாதுரியமாக, அந்த அமைச்சரவையோடோ அல்லது பிரதமரோடோ மோதாமல், தமது ஆட்சிக் காலத்தை நிறைவாக - மகிழ்வாக - மனக்கசப்பேதுமின்றி - முடித்துக்கொண்டார்.

ஆனால், இன்று நிலைமை தலைகீழ். தேசியப் பத்திரிகைகளைப் புரட்டினால் அமைச்சரவைக் கூட்டத்தில் இடம்பெறும் 'ஜனாதிபதி எதிர் அமைச்சர்கள்' வாக்குவாதப் போர் குறித்துத்தான் செய்திகள்.

நாடாளுமன்றத்தில் நடக்கும் கட்சிப் போர் இப்போது அமைச்சரவை வரை விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. தீவிரப் போக்குடைய சில அமைச்சர்கள் ஒரு புறம், ஜனாதிபதி மறுபுறம் என்று வாக்குவாதம். நடுவில் மென்மைப் போக்குடைய பிரதமர் ரணில்.

நல்லவேளையாக பிரதமர் ரணில் மென்மைப் போக்குடைய - நாடாளுமன்ற ஜனநாயகத்தில் ஊறிய - ஓர் அரசியல்வாதியாக இடை நடுவில் அமர்ந்து கொண்டிருக்கின்றார். அந்த இடத்தில் தீவிரப்போக்குடைய - கருத்து மோதலைத் தணித்து சமாளிக்கின்ற தன்மை இல்லாத - ஒருவர் அமருவாரேயானால் அமைச்சரவைக் கூட்டத்துக்கு தலைமை வகிப்பது ஜனாதிபதி சந்திரிகாவுக்கு 'நித்திய கண்ட' விவகாரமாகிவிடும் என்பது நிச்சயம்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு உளவுக் கருவிகள் பொருத்தப்பட்ட கைப்பையுடன் ஜனாதிபதி வருகின்றார் என்று அமைச்சர்கள் சந்தேகிக்கும் நிலைமை இப்போது.

"நாட்டின் தலைவியும், அமைச்சரவையின் தலைவியுமான எனக்கு எதிராக அமைச்சரவைக் கூட்டத்திலேயே மிக மோசமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் ஓர் அமைச்சரை நான் எப்படி எனது அமைச்சரவையில் வைத்திருக்க முடியும்?" - என்று தானே குறிப்பிட்டு பிரதமருக்குக் கடிதம் எழுதும் நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டிருக்கின்றார். இந்தக் கடிதம் மூலம் அமைச்சர் ஒருவரை பதவிநீக்கம் செய்யும் தனது முயற்சிக்கு ஜனாதிபதி கால்கோள் இட்டாராயினும், அமைச்சரவை அங்கத்தவர்கள் யார் என்பது குறித்து தன்னுடைய முடிவே இறுதியானது என்ற சாரப்பட பதிலடியாகக் கடிதம் வரைந்து அந்த முயற்சிக்கு, ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால், அமைச்சரவையில் ஜனாதிபதிக்கும் தீவிரப்போக்குடைய அமைச்சர்களுக்கும் இடையிலான கருத்து மோதல், வாக்குவாதம், சேறுவாரியிறைப்பு போன்ற சூடான நிகழ்வுகளுக்கு பிரதமரால் முற்றுப்புள்ளிவைக்க - முடிவுகாண - முடியுமா? அதை, அவர் விரும்புவாரா? - என்பது கேள்விக்குறியே.

அமைச்சரவைக் கூட்டத்திலேயே குழப்பத்துக்கு வழிசெய்யும் இந்த அரசமைப்பும், அதன் கீழான ஆட்சி முறையும் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வளம்பெற்றுத்தர வழிகாட்டமாட்டா என்பது மட்டும் நிச்சயம்.

# கிழக்கில் முஸ்லிம் இயக்கம் இரவுநேரம் ஆயுதப் பயிற்சி!

## இப்படிக் கூறுகிறது சிங்கள செய்தி ஊடகம்

கொழும்பு,ஜூலை22

'ஒஸாமா' என்ற பெயரில் முஸ்லிம் இயக்கம் ஒன்று கிழக்கில் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டுவருவதாக சிங்கள செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

மூதூர் கலவரங்களுக்கும், மூதூரில் உள்ள புலிகளின் காரியாலயம் சேதப்படுத்தப்பட்ட சம்பவத்துக்கும் இந்த இயக்கமே காரணம் என்று கருதப்படுகின்றது.

'ஜிகாத்' அமைப்பின் ஒரு பிரிவாகச் செயல்படும் இவ்வியக்கம் தற்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள சோமாவதி நிலம் என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் பயிற்சிகளை நடத்தி வருகின்றது. கிழக்கிலுள்ள முஸ்லிம் இளைஞர்களை அது பயிற்சியில் இணைத்தும் வருகின்றது.

வாழைச்சேனை அனர்த்தங்களுக்கும் இந்த இயக்கமே காரணம் எனத் தெரியவருகின்றது.

இந்த இயக்கம் பயிற்சி பெறும் பிரதேசங்களில் இரவு நேரங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்கின்றன.

- இப்படி அந்தச் செய்தி ஊடகத் தகவல் மேலும் தெரிவித்தது. (ஒ)

## மனித அவலத்தைக் கவனியாமல்

# அரசுக்கு முண்டுகொடுக்க உலக நாடுகள் முனைப்பு

## புலிகளின் பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை22

'கடந்த 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண மண்ணில் மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபொழுது கண்டும்காணாமல் இருந்த உலகநாடுகள் குடாநாட்டை நாங்கள் மீளவும் கைப்பற்ற முனைந்தபொழுது அரசுக்கு முண்டுகொடுத்தன.'

யாழ்.குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் மத்தியில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பிரமுகர் தமிழ்மறவன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கடந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு நாம் மீண்டும் இங்கு வருகை தந்துள்ளோம். இங்கு நாங்கள் வருவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதற்கு தற்போதைய வளர்ச்சியை அடைவதற்கு வன்னித் தளத்தில் நாமும் எமது மக்களும் எவ்வளவோ துன்பங்களைச் சந்தித்தோம்.

யுத்தத்தினால் அரசு எம்மை வெல்லமுடியாத காரணத்தினால்தான் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதன்மூலம் அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகின்ற நாங்கள் அதன் ஒரு அங்கமாகத் துறைசார்ந்த ஒவ்வொரு அமைப்புக்களையும் பலப்படுத்தி வருகிறோம்' என்றார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தனதுரையில் தெரிவித்ததாவது:-

அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக நாங்கள் இங்கு வருகைதந்தபோது எமது தேசியத் தலைவர் "மக்கள் உங்களுக்குக் கவசமாக இருப்பார்கள். நீங்கள் அவர்களுக்குக் கவசமாக இருங்கள்" - என்றார். அந்தக் கவசத்தை எவராலும் உடைக்க முடியாது. ஆனால், மக்கள் தம்மைச் சுற்றியிருந்த எவ்வளவோ பிரச்சினைகளை உடைத்து எறிந்தார்கள்; உடைத்தெறியத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள சிலர் தம்மையும் நேசிக்காமல் சமூகத்தையும் நேசிக்காமல் தீயசக்திகளுக்குத் துணைபோகிறார்கள். இவ்வாறானவர்களின் செயற்பாடுகளால்தான் சமூகத்துக்கும் அவமானம் ஏற்படுகிறது.

அரசியல்வாதியாகவோ, நிர்வாக அதிகாரிகளாகவோ நாங்கள் இங்கு வருகை தரவில்லை. விடுதலை இயக்கத்தின் பங்காளிகளாகவே வந்தோம். யுத்தம் நின்றதால் வந்தோம். யுத்தம் தானாக நிற்கவில்லை. அது நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் நசுக்கப்பட்டால் தாமும் நிம்மதியாக வாழமுடியாது என்று சிங்கள மக்களும் உணர்ந்ததாலேயே அது நிறுத்தப்பட்டது. அதற்கு எமது பலமே காரணமாகும். நாட்டில் எவ்வாறாகிலும் சமாதானம் ஏற்படுத்தப்படும். அது அரசியல் நடவடிக்கையாலும் ஏற்படலாம் அல்லது இராணுவ நடவடிக்கையாலும் ஏற்படலாம். எவ்வாறாயினும் மக்களுக்குச் சுதந்திரத்தை ஏற்படுத்துவோம் என்றார். (ஒ-10)

# ஓட்டோ சாரதிகளுக்கு புதிய விதிமுறை அறிமுகம்

## கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருக்கும் இடையே நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

கடந்த காலங்களில் ஓட்டோச் சாரதிகள் சிலரின் வேண்டத்தகாத செயற்பாடுகள் பற்றி அரசியல்துறையினருக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இனிவரும் காலங்களில் அவ்வாறு நடைபெறாது என சாரதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைமீறித் தவறாக நடந்துகொள்ளும் சாரதிகளைப் பயணிகள் அடையாளம் காண்பதற்காக அங்கத்துவ இலக்கம் கொண்ட அடையாள அட்டையைத் தமது சட்டையில் சாரதிகள் தொங்கவிடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ள அனைத்து ஓட்டோச் சாரதிகளும் தமது சங்கத்தில் அங்கத்தவராக இணையவேண்டும் எனவும் -

அவ்வாறு இணைவோரின் நலன்களைக் கவனிக்க அந்தந்தப் பிரதேசங்களில் கிளைச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் எனவும் - முடிவெடுக்கப்பட்டது.

சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேராதவர்கள் எக்காரணம் கொண்டும் சேவையில் ஈடுபடமுடியாதெனவும் -

அங்கத்தவர்களாக உள்ளோர் மக்களுடன் சுமுகமான உறவைப் பேணவேண்டும் எனவும் - வலியுறுத்தப்பட்டது.

ஓட்டோ சாரதிகளுக்கென சேமிப்புத் திட்டம் ஒன்றைப் புதிதாக ஆரம்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-10)

# மைதானத்தைச் சுத்தப்படுத்த மாணவருக்கு அனுமதி மறுப்பு!

வலி.வடக்கு,ஜூலை22

பாடசாலை கொள்வனவு செய்த காணியில் துப்புரவு செய்யச் சென்ற மாணவ - மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை காணியிலிருந்து வெளியேறவிடாமல் தடை செய்ததாகக் கூறப்படும் நபர் ஒருவர் மீது அச்சுவேலிப் பொலிஸார் கடந்த வெள்ளியன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மைதானத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட காணியிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் முன்னர் செயலாளராகப் பதவிவகித்த ஒருவரே இவ்வாறு நடந்துகொண்டார் எனத் தெரிவித்து அவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகப் பதவிவகித்த சமயமே மேற்படி காணி கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-86)

### நாளை

ஆடி 07
செவ்வாய்க்கிழமை
(23.07.2002)
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 3.01வரை.
நட்சத்திரம்: பூராடம்
முன்னிரவு 7.33வரை.
சுபநேரம் : 10.32 - 12.32
ராகுகாலம் : 3.02 - 4.12
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நம்மைப் பற்றி அதிகம் பேசுபவருக்கு மனதில் பயம் அதிகம் இருக்கும்.

# அநுரா - பௌஸி சந்திப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கருத்து முரண்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கவும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஏ.எச்.எம்.பௌஸியும் சந்தித்துப் பேசியுள்ளனர். கொழும்பில் அமைச்சர் எம்.எச்.முகமட்டின் இல்லத்தில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட இருவரையும் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா சந்தித்துப் பேசவைத்ததாகக் கூறப்படுகிறது.

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பௌஸியை சில தினங்களுக்குள் விலக்கிவிடுவேன்' என்று அநுரா பண்டாரநாயக்க தெரிவித்திருந்தார். கட்சிக்கு எதிராக தான் நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டமைக்குக் காரணம் அநுரா பண்டாரநாயக்கவே என்று பௌஸி குற்றம் சாட்டியிருந்தார்.

இத்தகைய நிலையில் இருவருக்கிடையிலும் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது. இந்த வைபவத்தில் பிரதமர் ரணிலும் அநுராவும் சந்தித்துப் பேசியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதத் திருமணம்:

# 5 பிள்ளைகளின் தந்தைக்கு கடூழியச் சிறை; அபராதம்!

வலி.வடக்கு,ஜூலை22

சட்டவிரோதமான முறையில் இரு பெண்களைத் திருமணம் செய்த நபர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மல்லாகம் மாவட்ட நீதிபதி பாலசுப்பிரமணியம் அவருக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளார்.

அபராதத் தொகையை செலுத்தத்தவறும் பட்சத்தில் மேலும் ஒருவருடம் சிறையில் இருக்கவேண்டும் என்றும் நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

இணுவில் கற்பகப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த தம்பிமுத்து உதயகுமார் என்பவரே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டவர் ஆவார்.


குறிப்பிட்ட சந்தேகநபர் ஏற்கனவே திருமணம் செய்து ஐந்து பிள்ளைகள் இருக்கக்கூடியதாக, மீண்டும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துள்ளதாகக் குற்றஞ்சாட்டி மானிப்பாய் பொலிஸார் மல்லாகம் நீதி மன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு மீதான விசாரணைகளின் முடிவிலேயே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (எ-86)


## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2002
## மாதிரி வினாத்தாள் இல. - 5


### பகுதி 1


தரம் 5 நேரம்:- 45 நிமிடம்

★ **01-04 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்பட்டுள்ள பொருளுக்குப் பிரதியீடாகப் பாவிக்கும் பொருளைத் தெரிந்து அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

01.

1 2 3 4

02.

1 2 3 4

03.

சீனி மா பால் சர்க்கரை உப்பு
1 2 3 4

04.

பென்சில் 1 2 3 4

★ **கீழ்வரும் வினாக்களில் உள்ள கூற்றுகளுக்குப் பொருந்தக்கூடிய விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

05. பாடசாலை மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆசிரியர்களுடன் வெளிக்களக் கற்றலுக்குச் செல்வது
 1. தம்முடன் கற்றவரின் பிறந்த நாளுக்கு.
 2. கல்விச் சுற்றுலாவுக்கு.
 3. மிருகக் காட்சிச்சாலைக்கு. (..............)

06. சிறுவர்கள் ஏன் புகைப்பிடித்தல் கூடாது?
 1. வயதில் குறைந்தவர்கள் என்பதால் ஆகும்.
 2. முதியவர்களே புகைப்பிடிப்பவர்கள் என்பதால் ஆகும்.
 3. சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதால் ஆகும். (..............)


07. ஏழைகளுக்கும் நாம் உதவி செய்யவேண்டும். அதற்குக் காரணம்.
 1. அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் என்பதனால்.
 2. நாம் கருணை உள்ளவர்கள் என்று காட்டிக்கொள்ள.
 3. நாமும் ஏழைகளாக மாறக்கூடாது என்பதற்காக. (..............)

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


08. சேந்தன் கீழ் உள்ளது போன்ற நாணயங்கள் செய்ய நினைத்தான்.




இவற்றை ஒரு திண்மத்திலிருந்து சம அளவான துண்டுகளை வெட்டி அவன் செய்தான். சேந்தன் பயன்படுத்திய திண்மங்களுள் மிகப் பொருத்தமானது எது?


(1) (2) (3) (4)


09. இங்கு நான்கு வடிவங்கள் உள்ளன.



இவற்றைப் பக்கங்களின் இயல்புக்கு ஏற்ப வரைபடமாக அட்டவணைப்படுத்திய முறை காட்டப்படுகிறது.




பின்வருவனவற்றுள் எது இடமிருந்து வலமாக வினாக்குறிகளுக்குரிய சரியான ஒழுங்கைக் காட்டுகிறது.




★ **10 - 13 வரையுள்ள வினாக்களின் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தை நன்கு விவரிக்கின்ற விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

10. மாணவர்கள் புள்ளிக் கோட்டின் மீது விடை எழுதிக்கொண்டிருந்தார்கள்.
 1. புள்ளிக்கோட்டின் மீது எழுதுவது கடினமானது.
 2. புள்ளிக்கோட்டின் மீது எழுதுவது இலகுவானது.
 3. புள்ளிக்கோட்டில் விடை அளிக்கும்படி கேட்கப்பட்டது.
 4. வேறு கோடுகளில் மாணவர்களுக்கு விடை எழுதத் தெரியாது.


11. சுந்தரியின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது.
 1. சுந்தரி கஷ்டமான செயலைச் செய்தாள்.
 2. சுந்தரி அழகான செயலைச் செய்தாள்.
 3. சுந்தரி இலகுவான செயலைச் செய்தாள்.
 4. சுந்தரி திறமையான செயலைச் செய்தாள்.


12. வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியது.
 1. அரசாங்கம் மக்களுக்கு ஆறுதல் கூறியுள்ளது.
 2. அரசாங்கம் மக்களுக்குத் தண்டனை வழங்கியுள்ளது.
 3. அரசாங்கம் மக்களுக்கு உதவி செய்தது.
 4. அரசாங்கம் நிவாரணத்தில் பாரபட்சம் காட்டியுள்ளது.

★ **கீழே முதலில் தரப்பட்டுள்ள இரு படங்களுக்கிடையிலான தொடர்பை அவதானித்து அடுத்துள்ள படத்துக்குத் தொடர்புள்ள படத்தினை தரப்பட்ட நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

13.

D E F G H

14.

D E F G H

15

D E F G H

★ **கீழ் உள்ள உருவங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவத்தைத் தெரிந்து அதன் ஆங்கில எழுத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.**

16.

A B C D E


17.

A B C D E

18.

A B C D E

★ **ஒரு வகுப்பிலுள்ள பத்துப் பிள்ளைகள் விரும்பிய பழங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி வினவப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**




19. இவர்களில் அதிகமானோர் விரும்பும் பழம் எது? ..............................

20. இவர்களில் ஒருவரும் விரும்பாத பழம் எது? ..............................

21. இரண்டு பழங்களை விரும்புபவர் யார்? ..............................

22. ஒரு பழத்தையும் விரும்பாத பிள்ளை யார்? ..............................

23. நிமலும், கரனும் விரும்பும் பழம் எது? ..............................

★ **கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

24. கண்ணுக்கு - காட்சி போல காதுக்கு ..............................
 (1) கேட்டல் (2) செவி
 (3) சத்தம் (4) சாட்சி

25. கரும்பலகைக்கு - கருமை போல வெண்கட்டிக்கு..............................
 (1) வெண்மை (2) வெள்ளை
 (3) வெறுமை (4) எழுத்து

26. வரதன் - பையன் போல நிமலா ..............................
 (1) பெண் (2) சிநேகிதி
 (3) சிறுமி (4) பைத்தியக்காரி

★ **கீழ்வரும் எண் கோலங்களுக்கேற்ப விடுபட்ட எண்களை எழுதுக.**

27. 10, 12, 20, 14, 30, 16, .........., ..........

28. 3, 6, 4, 8, 5, 10, .........., ..........

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

29. நீலம், பச்சை, மஞ்சள் என்னும் ஒழுங்கில் மின்குமிழ்கள் வரிசையில் ஒளிர்கின்றன. முதலாவது நீல மின்குமிழ் எனின் 38ஆவது மின்குமிழ் என்ன நிறம்?
 (1) நீலம் (2) பச்சை (3) மஞ்சள்

30. வீட்டிலிருந்து 2km தூரத்திலுள்ள கடைக்கும் ஒரே வேகத்தில் போய் வருவதற்கு நேரம் 30 நிமிடங்கள் எடுக்கும் எனின் 6km தூரத்திலுள்ள தபால் நிலையத்திற்குப் போவதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?
 (1) 90 நிமிடம் (2) 60 நிமிடம் (3) 45 நிமிடம் (4) 15 நிமிடம்

31. மாணவன் ஒருவன் பாடசாலைக்குச் செல்லும்போது அவனின் நிழலானது அவனுக்கு இடது கைப்பக்கம் விழுந்தது எனின் அவன் எத்திசையை நோக்கிப் பயணம் செய்தான்.
 (1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

32. ஒரு பண்ணையிலுள்ள ஆடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 48 ஆகும். அப்பண்ணையிலுள்ள ஆடுகள் எத்தனை?
 (1) 9 (2) 6 (3) 10 (4) 12

33. மாணவன் ஒருவன் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகள் முறையே 65, 70, 85, 47, 63 ஆகும். அவன் பெற்ற சராசரிப் புள்ளி யாது?
 (1) 85 (2) 65 (3) 66 (4) 60

★ **பொருத்தமற்ற விடையின் கீழ் கோடிடுக**


34. நெல் வயலில் காணமுடியாதது
 (1) வீடு (2) முற்றம் (3) நெற்

35. துவிச்சக்கர வண்டியில் காண
 (1) கம்பி (2) இருக்கை (3)

36. சூரியனைக் குறிக்கும் வேறு
 (1) கதிரவன் (2) திங்கள் (3)

37. தளபாடங்கள் செய்வதற்கு மி
 1. பாலை 2. தேக்கு 3. தென்

★ **கீழே தரப்பட்ட வரிப்படத்தை அ கீழ்க்கோடிடுக.**



38. A என்ற இடத்தில் வரவேண்டி
 (1) இரட்டை எண்கள்
 (3) முக்கோணி எண்கள்

39. 3 என்ற எண் எப்பிரதேசத்தி
 (1) AB (2) BC (3)

40. 1, 2, 3, 4 போன்ற எண்கள்
 (1) A (2) B (3)

### பகுதி

★ **கீழ்வரும் பாடலை வாசித்து 1 முதல் விடை எழுதுக.**

மீனினம் ஓடிப் பரக்குதம்மா -
 வெள்ளி ஓடமொன்று செ
வானும் கடலாக மாறுதம்மா -
 மாட்சியிலுள்ளம் முழுகுத
அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா
 ஆம்பலும் கண்டு களிக்கு
இம்பருலகின் இயல்பிதம்மா -
 கின்னார் இனியாரும் உ

01. இப்பாடல் காட்சியினை எந்தப்
 ..............................

02. இங்கு மீனினம் என எவற்றை
 ..............................

03. கவிஞர் வெள்ளி ஓடம் என்று
 ..............................

04. கடலுக்கு ஒப்பாகக் கூறப்படுவது

05. இந்தப் பொழுதினிலே மகிழ்ச்சி குறிப்பிடுகிறார்? ..............................

★ **ஒத்த கருத்துள்ள சொல் இரண்**

06. அம்புயம் ..............................
07. களிப்பு ..............................
08. உள்ளம் ..............................
09. வானம் ..............................

★ **எதிர்க் கருத்துள்ள சொல் இரண்**

10. வாட்டம் ..............................
11. தளர்வு ..............................

★ **பாடலில் உள்ள வினையெச்**

12. ..............................

★ **பிரித்து எழுதுக**

14. மீனினம் ..............................
15. ஓடமொன்று ..............................

★ **ஆங்கிலப்பதம் எழுதுக**

16. வானம் ..............................
17. கடல் ..............................
18. அம்மா ..............................
19. மதி ..............................

★ **குமரன் தரம் 5இல் கல்வி கற்கின் வீட்டிற்குத் தேவையான பொருள் வந்தார். அவர் வாங்கிய பொருள் தரப்பட்டுள்ளன. அதன் அடிப்ப களை எழுதுக.**

| | |
|---|---|
| காற்சட்டைத் துணி | - 2 1/2 |
| தேங்காய் | - 8 |
| மின்கலம் | - 3 சோ |
| தீப்பெட்டி | - 1 டசி |
| சீனி | - 3 கிே |
| அரிசி | - 8 1/2 |
| தேங்காயெண்ணெய் | - 1 போ |

20. அவர் வாங்கிய சீனியினதும், அரி கிராமில் எழுதுக.

21. காற்சட்டைத் துணி வாங்குவதற் தால் 1மீற்றர் துணியின் வில
 ......

22. ஒருசோடி மின்கலத்தின் வில வாங்கிய மின்கலங்களின் மொத்த மொத்தப் பெறுமதியும் சமனாக காய் என்ன விலை?
 ......

23. 1 தீப்பெட்டி 2ரூபா 50சதமாகும். பெறுமதி எவ்வளவு?
 ......

24. 1 லீற்றர் தேங்காயெண்ணெயின் வாங்கிய எண்ணெயின் விலை
 ......

25. அவர் வாங்கிய சீனியினை குமர அடைத்து வைத்தான். அதன்படி அளவு யாது?

26. அவர் வாங்கிய அரிசியினை 10

நற்கதிர் (4) கதிரை
ணக்கூடியது
) தொப்பி (4) பூட்டு
று ஒரு சொல்
(3) அருணன் (4) தினகரன்
மிகவும் பொருத்தமான மரம்
தன்னை 4. முதிரை
**அவதானித்து சரியான விடையின்**




ண்டிய எண்வகை.
(2) சதுர எண்கள்

தினுள் அடங்கும்
(3) AC
ள் எப்பிரதேசத்தில் அடங்கும்
(3) C

**தி -2**
**நேரம்:- 1மணி 15 நிமிடம்**

**முதல் 10 வரையான வினாக்களுககு**

ர - ஊடே
செல்லுதம்மா
ா - இந்த
ருகுதம்மா
ம்மா - அயல்
ரிக்குதம்மா
ா - மதிக்
உண்டோ அம்மா
ந்தப் பொழுதினில் காணலாம்?
.................................
றை குறிப்பிடப்படுகிறது?
.................................
ன்று எதனைக் குறிப்பிடுகின்றார்?
.................................
வது எதனை? .................................
ழ்ச்சியடைவது எது எனக் கவிஞர்
.................................

**ரண்டு எழுதுக**
........ ..............................
........ ..............................
........ ..............................
........ ..............................

**இரண்டு எழுதுக**
........ ..............................
........ ..............................

**சங்கள் இரண்டு எழுதுக.**
13. ..............................
..............................
..............................
..............................
..............................
..............................
..............................

**ங்கின்றான். அவனது தகப்பனார் பொருள்களைக் கடையில் வாங்கி பொருள்களும் அவற்றின் அளவும் கீழே பயடையில் வினாக்களுக்குரிய விடை**

1/2 மீற்றர்

சோடி
டசின்
கிலோக்கிராம்
1/2 கிலோக்கிராம்
போத்தல்

, அரிசியினதும் மொத்த அளவைக்
.............................. கிராம்.
தற்கு 350 ரூபாவைக் கொடுத்திருந்
விலை யாது?
................ ரூபா ............ சதம்.
விலை 32 ரூபா ஆகும். அவர்
மொத்தப் பெறுமதியும், தேங்காய்களின
னாக இருந்தன. அதன்படி 1 தேங்
................ ரூபா ............ சதம்.
5ம். அவர் வாங்கிய தீப்பெட்டிகளின்
................ ரூபா ............ சதம்.
ாயின் விலை 40ரூபா ஆகும். அவர்
விலை யாது?
................ ரூபா ............ சதம்.
குமரன் 12 சிறிய போத்தல்களுள்
ன்படி 1 போத்தலில் உள்ள சீனியின்
............ கிராம்
ா 10 நாட்களுக்கு சமமாகப் பயன

படுத்தலாம். 1kg அரிசியின் விலை 36ரூபா எனில் 1 நாளுக்குச் செலவாகும் அரிசி ... ர் பெறுமதி யாது?
................ ரூபா ............ சதம்.

27. அவர் வாங்கிய சீனி... ன் மொத்த விலை 105ரூபா ஆகும். அவர் 50 கிலோகிராம் சீனியை வாங்கியிருந்தால் எவ்வளவு பணம் கொடுத்திருப்பார் என்பதைச் சொற்களில் எழுதுக?
..........................................................................

★ பின்வரும் உணவுப் பண்டங்களைப் பாதுகாக்கும் முறைகளை அருகே தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் ஆங்கில எழுத்தை அடைப்புக்குள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 28. எலுமிச்சம்பழம் | ( ) | A போத்தலில் அடைத்தல் |
| 29. தானியங்கள் | ( ) | B புகையூட்டல் |
| 30. குளிர்பானங்கள் | ( ) | C ஊறுகாயிடுதல் |
| 31. புகையிலை | ( ) | D குளிரூட்டல் |
| 32. சிறுமீன் | ( ) | E உலர்த்துதல் |
| 33. இறைச்சிவகை | ( ) | F கருவாடாக்கல் |

★ **கீழ்வரும் வினாக்களில் கீறிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.**
தகிட, தகதிமி, உடலசைவுகள், தாலாட்டு, கோலாட்டம்

34. .................... கிராமிய நடனங்களில் ஒன்றாகும்.
35. சதுஸ்ர நடைக்கேற்ப தாளம் போடுவதற்கு .................... என்ற சொல்லைப் பயன்படுத்தலாம்.
36. திஸ்ர நடைக்கேற்ப தாளம் போடுவதற்கு .................... என்ற சொல்லைப் பயன்படுத்தலாம்.
37. நடத்தல், துள்ளுதல், வளைதல் என்பன .................... எனப்படும்.
38. .................... நாட்டார் பாடல்களில் ஒன்றாகும்.

★ **கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் சித்திரா தனது சித்திரப் பாடத்தின்போது நிறங்கள் சிலவற்றை ஒன்றுடன் ஒன்று கலந்து சில புதிய நிறங்களைப் பெற்றார். அவர் கலந்து பெற்ற நிறங்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

39. RED + YELLOW = ..............................
40. YELLOW + BLUE = ..............................
41. RED + WHITE = ..............................
42. RED + BLUE = ..............................


★ **ஆக்கப்பாடத்தின்போது படத்திற்கான வரைச்சட்டம் தயாரிக்கத் தேவையான பொருள்கள் கீழே தரப்பட்டுள்ளன.**
உறுஞ்சும் குழாய்கள், தடித்த காட்போட் அட்டை, மெல்லிய கம்பித்துண்டு, ஒருபடம் இவற்றைப் பயன்படுத்தி தரம் 5 மாணவர்கள் தயாரித்த வரைச்சட்டத்தின் செயல்முறையானது ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளது. அவற்றின் சரியான ஒழுங்கில் 1, 2, 3, 4, 5 என இலக்கமிடுக.


43. 1. படத்தின் 4 பக்கங்களுக்கும் பொருந்தக்கூடியதாக நான்கு நான்கு உறுஞ்சும் குழாய்கள் வரக்கூடியதாக கம்பியைப் பாவித்து ஒழுங்கு செய்தல். ☐
2. படத்தினை மேசையின் மேல் வைப்பதற்காகப் படத்தின் பின்பக்கமாகத் தாங்கி ஒன்றைப் பொருத்துதல் ☐
3. படத்திற்கும் வரைச்சட்டத்திற்கும் போதியளவு இடமிருக்கக் கூடியதாகச் செவ்வகமாக காட்போட் அட்டையை வெட்டுதல். ☐
4. வரைசட்டத்தைத் தெளிவுபடுத்தப் படத்தைச் சுற்றியுள்ள உறுஞ்சும் குழாய்களைச் சிறிய கம்பியினால் இணைத்து மூலைகளை வெட்டிவிடுக. ☐
5. அதன் மத்தியில் படத்தை ஒட்டிக் கொள்க. ☐

★ **சரியான விடை எழுதுக.**


44. கிராமிய விளையாட்டுக்கள் இரண்டு எழுதுக.
..............................
45. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
..............................
46. 2000ஆம் ஆண்டு நடைபெற்ற உலக ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் வெண்கலப் பதக்கம் பெற்ற இலங்கை வீராங்கனை யார்? ..............................
47. குறுந்தூர ஓட்டங்களை ஆரம்பிப்பதற்கு வழங்கப்படும் கட்டளை களை எழுதுக. ..............................
48. உள்ளரங்க விளையாட்டுக்கள் 2 எழுதுக.
..............................


★ **கீழ்வரும் தையல் மாதிரிகள், எவ்வகைத் தையல் என்பதை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து எழுதுக.**
குறுக்குத் தையல், வெட்டுக்குத்துத் தையல், மீன் முள்ளுத் தையல்.


49.

..............................

50.

..............................


★ **சரியான விடைகளை எழுதுக.**

51.

இத்திண்ம உருவின் பெயர் யாது?
..............................

52.

இக்கடிகாரம் சரியான நேரத்திலும் 10 நிமிடங்கள் முந்தி ஓடுகின்றது. இக்கடிகாரம் பி.ப. நேரத்தைக் காட்டுகிறதாயின் இதன் சரியான நேரத்தை நியம நேரத்தில் எழுதுக. ..............................

53.


இவ்வுருவின் சுற்றளவு யாது?
..............................cm

54.

இச்சதுர வடிவ மைதானத்தின் $^1/_4$ பங்கு புற்றரையாகும். மிகுதிப் பகுதி மணற்றரையாகும். புற்றரையைவிட மணற்றரை எவ்வளவு பங்கு கூடுதலாகும்? ..............................

55.

நிழற்றப்பட்ட பகுதியைத் தசம தானத்தில் எழுதுக.
..............................

★ **கீழே தரப்பட்டுள்ளவற்றுக்குப் பொருத்தமான உதாரணங்களைக் கூட்டுக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.**

56. பெண்பால் வினைச்சொல் ..............................
57. இறந்த காலத்தில் வந்த வினைச் சொல் ..............................
58. படர்கைப் பெயர்ச்சொல் ..............................
59. தன்மை வினைச் சொல் ..............................
60. முன்னிலைப் பெயர் ..............................

| ஆடுவேன், படிக்கிறாள், பார்த்தனர், நீங்கள், பறவைகள் |
|---|

★ **சரியான விடைகளை எழுதுக.**

61. வகுப்பாசிரியர் வகுப்பறைக்குச் சென்றார்.
வகுப்பாசிரியர் மாணவரை அமைதிப்படுத்தினார்
இவற்றைத் தொடர் வாக்கியமாக எழுதுக.
..............................
..............................
62. பெண் மான் - பிணை போல பெண் குரங்கு
..............................
63. ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம் என்னும் கருத்தைத் தரும் பழமொழியை எழுதுக.
..............................
64. எங்கட வீட்டில கோடாலியும், மம்பட்டியும் இருக்குது என்னும் பேச்சு வழக்கைத் திருத்தமாக எழுதுக.
..............................
65. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார்? ..............................

★ **கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

66. தற்போது சாதாரண உள்ளூர்த் தபால் கட்டணம் எவ்வளவு?
..............................
67. மிகப் பெரிய கோள் எது? ..............................
68. சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது?
..............................
69. சந்திரனில் முதல்முதல் காலடி வைத்தவர் யார்?
..............................
70. சுவரை நிலைக்குத்தாகக் கட்டியெழுப்பப் பயன்படும் உபகரணம் எது? ..............................
71. 0-5 வரையுள்ள மனித வயதுப் பருவத்தை எவ்வாறு அழைப்பர்?

★ **கூண்டுக்கிளி தன் கதை கூறல்..... என்னுந் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையா திருத்தல் வேண்டும்.**

72. ..............................
..............................
..............................
73. ..............................
..............................
..............................
74. ..............................
..............................
75. ..............................
..............................
76. ..............................
..............................
77. ..............................
..............................

தயாரிப்பு:
**திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இன்று சனி மாற்றம்

22.07.2002இல் நிகழும் சனீஸ்வர மாற்றம் 05.09.2004 வரை உங்களுக்கு அளிக்கும் பலாபலன்களை முன்கூட்டியே அறிய ஆசைப்படுகிறீர்கள் அல்லவா? எங்கும் விற்பனையாகின்றது. V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். (6254)

### குத்தகைக்கு

யாழ்.K.K.S. வீதியில் கடை குத்தகைக்கு கொடுக்கப்படும். இதே இடத்தில் 1 1/4 பரப்பில் கட்டடங்களுடன் இடம் விலைக்குத் தேவை. விள.இல.1577, மே/பா உதயன். (6249)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972, விசாக நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமற்ற லண்டனில் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. புகைப்படம், குறிப்பு முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். ப.கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6233)

### தவறிவிட்டது

அரசடிச் சந்தி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி கந்தசாமி அற்புதராணி என்பவரின் தேசிய அ.அட்டை (இல.505193225V)யுடனும் சிறு தொகைப் பணத்துடனும் ஒரு கறுப்புநிறப் பணப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மீனாட்சி அம்மன் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (6234)

மறவன்புலோ மந்தி, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த தம்பி ஐயா ரகுகுமார் என்பவரது விசேட அ.அட்டை (091007341), செஞ்சிலுவைச்சங்க தொழில் அ.அட்டை என்பன சுன்னாகத்திற்கும் புன்னாலைக் கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புன்னாலைக்கட்டுவன் செல்வம் சைக்கிள் கடையில் அல்லது K.S.T. ரெக்ஸ், யூபிலி பஜார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (6258)

### விற்பனைக்கு

3 பரப்புக் காணியுடன் வீடு வடலியடைப்பில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- க.அருந்தவராஜ், C/O க.தியாகராசா, வேம்படி முருகன கோயில் அருகில், தாவடி தெற்கு, கொக்குவில். (6231)

நல்ல நிலையிலுள்ள இரும்புப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.14 (39), சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (6239)

பல இனங்களில் கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டார்கள், மீன் தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (6248)

கடைப் பாவனைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.ம.விக்னேஸ்வரன், அரசடி வீதி, கந்தர்மடம் (பழைய அங்கர் பாமசிக்கு அருகில்) (6228)

புதிய கம்பியூட்டர் பெண்டியம் III, ரைகர் ஜெனரேற்றர், கோட்லெஸ் போன் (5km) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தியாகு, சங்கத்தானை, சாவகச்சேரி.
T.P. No.070- 212538. (6215)

## வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை மாணவருக்கு!

தென்மராட்சி,ஜூலை22

பளை, வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை கொடிகாமத்தில் உள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென பாடசாலை அதிபர் சி.இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

பாடசாலையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் ஓரளவு சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்டதாகவும் -

பல பிறப்புச் சான்றிதழ்கள் முற்றாகச் சேதமடைந்து காணப்பட்டதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார் (ஒ-117)

## மருத்துவப் பணிகளில் மீள் நியமனங்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகள், அரசாங்க மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களில் எதிர்வரும் 2003ஆம் ஆண்டிலிருந்து பணியாற்ற, ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பதவியிலிருந்து ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், மருந்துக் கலவையாளர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் வெளியிட்டுள்ள சுற்று நிருபம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மீள்நியமனம் பெறுபவர்களுக்கு ஓய வூதியம் கிடைக்கமாட்டாது என்றும் -

இவர்கள் ஓய்வுபெறும் வேளையில் பெற்றுவந்த சம்பளமே பதவிக் காலத்தில் இவர்களுக்கு வழங்கப்படும் என்றும் - அச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்களது ஓய்வூதிய சீட்டு, மாவட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்ற மருத்துவச் சான்றிதழ், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எப்பகுதியிலும் சென்று கடமையாற்றுவதற்கு சம்மதம் தெரிவிக்கும் கடிதம் ஆகியவற்றின் தலா 3 பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்தமைக்காக நேற்று கொழும்பில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர்

**திரு.க.சண்முகலிங்கம் அவர்கள்**

மேன்மேலும் பல சிறப்பான சேவைகளை ஆற்றி பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் பெருமானின் அருளை வேண்டிப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*
(C/23017)

சித்திர வேலாயுதர் ஆலய பரிபாலன சபையினரும், இந்து மன்றத்தினரும்.



### யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## பாரவூர்திகளின் மீள்பதிவு

எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சகல பாரவூர்த்திகளும் தமது பதிவினை சங்கத்தில் மீள்பதிவு செய்துகொள்ளல் வேண்டும். எனவே சகல பாரவூர்தி உரிமையாளர்களும் எதிர்வரும் (31.07.2002) புதன்கிழமைக் கிடையில் தமது மீள்பதிவினை சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் சகல அங்கத்தவர்களும் தமது சேமிப்புப் புத்தகங்களையும் அலுவலகத்தில் ஒப்படைத்து மீதியை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.


முக்கிய குறிப்பு: *மீள்பதிவு செய்யப்படாத பாரவூர்திகள் தாமாகவே சேவையிலிருந்து விலகியதாகக் கருதப்படும்.*

*215, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(6262)

இ.அரிகரன்
கௌரவ செயலாளர்


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1927
-
07
-
10



மறைவு
2002
-
06
-
23

### திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை

*(பளை அரசினர் வைத்தியசாலை முன்னாள் மருந்தாளரின் அன்பு மனைவி)*

திதி:22.07.2002

**அன்பின் திருவுருவாய்**
**பாசத்தின் உறைவிடமாய்**
**காலமெல்லாம் எமக்காகக் கற்பூரமாய்**
**உமைக் கரைத்து நாமெல்லாம்**
**நல்வாழ்வு வாழ நாடி நின்ற எம் தெய்வமே!**
**ஆயிரம் உறவுகள் இருந்தாலும்**
**"அம்மா" என்று ஆசையுடன் அழைத்து மகிழ**
**எமக்கு உறவு ஒன்றில்லையே! - எமை**
**கண்ணீரில் கரைய வைத்துச் சென்றதேனோ?**

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.07.2002) திங்கட்கிழமை நிகழவுள்ளன. இந்த நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*3ஆம் கட்டை, கட்டப்பிராய்.*
நிரந்தர முகவரி: "விஷ்ணு அகம்" பெரியபளை, பளை. (6259)

- பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## செய்திக்கொத்து

### ரூ.73 லட்சம் நஷ்டம்

தென்மராட்சி,ஜூலை22

பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் பச்சிலைப் பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 73லட்சம் ரூபா நட்டமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின் கட்டடங்கள், பொருள்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவைக்கு ஏற்பட்ட சேதங்களின் மதிப்பீடே இத் தொகையெனத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத் தலைமை அலுவலகம், கூட்டுறவு மண்டபம், கிளைக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் 18 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)

### அடுத்தவாரம் கிளை திறப்பு

தென்மராட்சி,ஜூலை22

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மட்டுவில் மலர்மகள் கிளை (இல.8) அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

சங்கத்தின் மட்டுவில் வடக்கு கிளை அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-117)

### கூட்டம்

தென்மராட்சி,ஜூலை22

பளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையை மீள இயங்கச் செய்வதற்காக நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00மணிக்கு புலோப்பளை வீதியில் உள்ள பளைப் பிரதேசசெயலகத்தில் நடைபெறுமென சபைத் தலைவர் தா.சுவாமிநாதன் அறிவித்துள்ளார்.

பளை ஆஸ்பத்திரியை மீள இயக்குவது பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-117)

### பாடநூல் விநியோகம்

வடமராட்சி கிழக்கு,ஜூலை22

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளத் திறக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கு, இலவச சீருடை, இலவச பாடநூல்களை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது. (ஒ-182)

### கணனி நிலையம் திறப்பு!

வடமராட்சி கிழக்கில் கணனிப் பயிற்சி நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கு சூழல் வளம் பேணும் சங்கம் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றது.

குடத்தனை, மருதங்கேணி ஆகிய இடங்களிலேயே இப்பயிற்சி மையங்கள் திறக்கப்படவுள்ளன. (ஒ-182)

### சுடுகாடாக காட்சி தரும் மருதங்கேணி சந்தை

வடமராட்சி கிழக்கு,ஜூலை22

மருதங்கேணி சந்தைப் பகுதி தொடர்ந்தும் சுடுகாடாகவே காட்சியளிக்கின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்த சந்தைக கட்டடம் மற்றும் கடைத் தொகுதிகளை புனரமைக்கும் நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

சந்தை இயங்காமையினால் அப்பகுதி மக்கள், தமது உற்பத்திப் பொருள்களை விற்பதிலும், பொருள்களை வாங்குவதிலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-182)

### மாவீரர் மயானத்தில் சிரமதானம்

வரணி,ஜூலை22

கொடிகாமம் மாவீரர் மயானம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கு முன்னோடியாக மைதானத்தின் சிரமதான திருத்த வேலைகள் முடிவுற்றுள்ளன. தற்சமயம் சுற்று மதில் அத்திவாரம் அகழ்வு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த ஒரு கிழமையாக இளைஞர்கள் பலர் தொடர்ந்து இவ்வேலையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (ஒ-ரி)

### சேதமடைந்த வீதி

குருநகர்,ஜூலை22

பாஷையூர் புனித அந்தோனியார் வீதி சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்துக்குச் செல்லும் மிக முக்கிய வீதியாக இது உள்ளதனாலும் இவ்வீதியூடாக மக்கள் அதிகளவில் நடமாடுவதாலும் இவ்வீதி திருத்தப்படாதது மிகுந்த அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-51)

### மிதிவெடி அபாயம்!

சண்டிலிப்பாய்,ஜூலை22

சிறுவிளான் பகுதியிலுள்ள தமது வீடுகளில் - வீட்டு காணிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக அண்மையில் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து தங்கள் சொந்த இடத்திற்கு திரும்பிய இடம்பெயர்ந்த மக்களில் பலர் இவ்வீடுகளில் வசிக்க முடியாது வேறு இடங்களில் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். இப்பகுதியிலுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று அந்த மக்கள் கோரியுள்ளனர். (ஒ-135)

## இரங்கல் திருப்பலி

### அமரர் செலஸ்ரீன் தெய்வேந்திரா போல்

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக யாழ்.மரியன்னை பேராலயத்தில் நாளை (23.07.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

குருக்கள், துறவியர், உறவினர், நண்பர்களை இதில் கலந்து செபிக்க அழைக்கின்றோம்.

(6257)

அருட்திரு. ஜீவா போல்,
அருட்திரு. எமில் போல்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1931
-
06
-
23



உதிர்வு
2001
-
08
-
01

### திருமதி கமலாவதி வாமதேவன்

திதி: 22.07.2002

***எங்கள் அன்புத் தெய்வம்***
***எம்மைவிட்டு மறைந்து***
***ஆண்டு ஒன்றானாலும் - இதயத்தில்***
***உங்கள் நினைவு இணைந்தே இருக்கும்.***

**உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*Y.M.H.A. அருகில்,*
*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*
(6256)

பிரிவால் துயருறும்:
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

*சிங்களவருக்கு இனவாதம் இளமையில் ஊட்டப்படுகிறது*

# தமிழ் மண்ணில் கலாசார சீரழிவுகள் திட்டமிட்டே விதைக்கப்படுகின்றன!

## மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,ஜூலை22

தமிழ் மண்ணில் கலாசாரச் சீரழிவுகள் யாவும் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட முறையில் நன்கு திட்டமிட்டே விதைக்கப்படுகின்றன. இதே சமயம் சிங்களவர்களுக்கு இனவாத உணர்வு சிறுவயதுமுதலே ஊட்டப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் தமிழ்விழி இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கொண்டு விழிப்புக்குழு அமைப்பது தொடர்பான கூட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ் மறவன் தலைமையில் சமீபத்தில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தமிழ்விழி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:-

சாந்தி, சமாதானம், அன்பு, அமைதி நிலவவேண்டிய - நயினாதீவில் அமைந்துள்ள - விகாரையின் கருவறையில் புத்தரின் சிலையுடன் மறைந்த படைத்தளபதியான கொப்பேகடுவ உட்பட அவருடன் மறைந்த ஏனையவர்களின் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. சிங்கள மக்கள் புத்தரை வழிபடச் செல்லும்போதும், வழிபட்டுவிட்டு தலை நிமிரும்போதும் இவர்களின் படங்களே அந்த மக்களின் கண்கள் முன் நிறுத்தப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள்மூலம் சிங்கள மக்களின் மத்தியில் இன உணர்வு ஊட்டப்படுகின்றது.

தென்பகுதியைப் பொறுத்த வரையில் ஆரம்பக்கல்விமுதல் பல்கலைக் கழகக் கல்விவரை "மஹாவம்சம்" என்ற நூலை வைத்து சிங்கள மக்களே இந்த நாட்டின் சொந்தக்காரர்கள் என்று கூறப்பட்டுவருகின்றது. அத்துடன் பௌத்த மதமும், புத்த பெருமானும் "இந்த நாட்டை யாருக்கும் கொடுக்கக் கூடாது அப்படிக் கொடுக்கப்பட்டால் அது புத்தபெருமானுக்கும் பௌத்த மதத்திற்கும் செய்யும் பெரும் துரோகம்" என்ற உணர்வு சிறுவயதுமுதலே அவர்களுக்கு ஊட்டப்பட்டு வருகின்றது.

தமிழ்மொழியில் வெளிவருகின்ற தமிழிலக்கியமாக இருந்தாலும் சரி, சமய நூல்களாகவும் இருந்தாலும் சரி அவற்றில் தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்களாகவும் இந்தியாவுடன் தொடர்புபட்டவர்களாகவும் காட்டப்பட்டு வருகின்றன. இத்தகைய செயல்பாடுகள் மூலம் 'இந்தியாவிற்குரியவர்கள் தமிழ் மக்கள்' என்று காட்டுவதிலும் இளம் பராயத்திலேயே இதனைப் பரப்புவதிலும் கூடிய கவனம் அரசுகளால் எடுக்கப்பட்டு வருகின்றது.

இன்று இந்த மண்ணில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் சமூக சீரழிவுகள் யாவும் ஒரு ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட முறையில் நன்கு திட்டமிடப்பட்டே விதைத்துவிடப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சட்டப்படி பதிவுபெற்ற மதுபானச் சாலைகள் 22இற்கும் 28இற்கும் இடையிலேயே உள்ளன. ஆனால், யாழ்.பல்கலைக்கழகச் சுற்றாடலில் மட்டும் 12 மதுபானச் சாலைகள் காணப்படுகின்றன. இவைகள் கூட அரசினால் திட்டமிட்ட முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

கசிப்பு ஒழிப்பு, கலாசாரச் சீரழிவுகள் சம்பந்தமாக மக்களுடன் சென்று நாம் கலந்துரையாடினோம். அப்போது "இத்தகைய சமூக சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இராணுவ முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளில் வசித்தவர்களாக அல்லது அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாக உள்ளதாகக் கூறப்பட்டது.

"பொதுமக்களாகிய நாங்கள் இதனைத் தடுக்கவோ அன்றி எதிர்க்கவோ எதிர்க்கவோ முற்பட்டால் எம்மீது வேறு வகையாக முத்திரை குத்தப்பட்டு பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாக்கப்படுகிறோம். ஆனால் எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெற அனுமதிக்கமாட்டோம். எமக்கு உறுதுணையாக விடுதலைப் புலிகள் இருப்பதனால் எந்த வகையான பயமும் இல்லை." இவ்வாறு அந்த மக்கள் எம்மிடம் கூறினார்கள்.

"இம்மண்ணில் சமாதானத்தை நிலைநாட்டவேண்டும் என்று தற்போது அரசு முனைந்து நிற்பதற்கு பல காரணங்கள் பின்னணியாக அமைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் ஒருபுறம் இருக்க மறுபுறம் மேற்குலக நாடுகள் அரசுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய மறுத்து வருகின்றன. அத்துடன் இங்கு சர்வதேச நிறுவனங்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக சமாதானம் கொண்டுவரப்படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றன.

இத்தகைய பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இன்று அரசு சமாதான முயற்சியில் ஈடுபட முன்வந்துள்ளது. இங்கு அரசு ஒரு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் தமிழர்களுக்கு தரவேண்டியவைகளை சீரான முறையில் தந்து சமாதானத்தை நிலைநாட்ட முடியும். இல்லையேல் விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்தொழித்து ஒரு முடிவை திணிக்க முடியும்" - என்றார்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த தமிழ்மறவன் தனது உரையின் போது:-

"இந்த மண்ணின் அத்தியாவசியப் பொருள்களான உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடுகள் காணப்பட்ட போதிலும் சமூக சீரழிவுப் பொருள்களான மதுபான வகைகள் மற்றும் சிகரெட், ஆபாசப்படங்கள் ஆகியவற்றுக்கு எந்தவகையான தட்டுப்பாடும் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்படவில்லை. இவைகள் வேண்டியளவு இம்மண்ணுக்கு இறக்குமதி செய்யப்பட்டே வந்தன.

கிராம அலுவலர்களைப் பொறுத்த வரையில் பல்வேறு வகையான சமூக சுமைகளையும் சுமந்துவருகின்றீர்கள். அத்துடன் உங்களுக்கு குடும்பம், உறவுகள் என்று உண்டு. ஆனாலும் கூட இம்மண்ணின் சுமைகளின் ஒரு பகுதியை நீங்களும் சுமந்து பங்களிப்புச்செய்ய வேண்டும் - என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் பகுதி கொள்கை பரப்புப் பொறுப்பாளர் ஸ்ரீநாத் தனதுரையின்போது "தற்போது அமைக்கப்படும் விழிப்புக் குழுக்கள் இம்மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூக சீரழிவுகளைக் கட்டுப்படுத்தவே உருவாக்கப்படுகின்றன. ஒரு நாடு, ஒரு இனம் விடுதலை பெறும் போது அந்த நாட்டில் காணப்படக் கூடிய சமூக சீரழிவுகள், கெட்ட செயல்கள் என்பனவும் ஒழிக்கப்பட வேண்டும். கிராம அலுவலர்களை பொறுத்த வரையில் சமூகத்தில் மக்களுடன் பழகுபவர்கள், ஒவ்வொரு மக்களையும் நன்கு அறிந்தவர்கள். அந்தவகையில் மக்களை நல்வழிப்படுத்தவும் வழிநடத்தவும் கடமைப்பட்டவர்கள். அத்துடன் அவர்களின் கடமையில் இந்த வகையான நடவடிக்கைகளும் ஒரு பகுதியாகும். ஆகவே சமூக சீரழிவுகளைத் தடுக்கும் பணிகளில் கிராம அலுவலர்கள் மனப்பூர்வமாக ஈடுபடவேண்டும்.

"எதிர்காலத்தில் எச்சந்தர்ப்பத்திலும் இம்மண்ணிலிருந்து நாம் வெளியேறப்போவதில்லை. அதன் அடிப்படையிலேயே இன்று மாவீரர் துயிலும் இல்லங்களை மீளவும் கட்டி வருகின்றோம்" என்றார். (ஒ-86)

# தென்மராட்சி விவசாயிகளுக்கு!

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருட காலபோக நெற்செய்கை 2 ஆயிரம் ஹெக்ரெயர் வயல்களில் மேற்கொள்ள விவசாயத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தப்பகுதிகளில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள காணிகளின் பரப்பளவு, தேவைப்படும் விதை நெல்லின் அளவு ஆகிய விவரங்களைத் தத்தமது பகுதி விவசாய சம்மேளனங்களின் ஊடாக தெரியப்படுத்தும்படி கமநல சேவைகள் திணைக்களத்தினர் கேட்டுள்ளனர்.

கடந்த இரு வருடங்களாக தென்மராட்சி பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படாதது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# தென்னை உரங்கள் மானிய விலையில்!

## வழங்க நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் உள்ள தென்னைகளுக்கு இடுவதற்குரிய உரவகைகள் 20 வீத மானிய அடிப்படையில் வழங்க சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்தினால ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெங்குச் செய்கையாளர்கள் தம்மிடம் உள்ள தென்னைகள் மற்றும் தேவைப்படும் உரவகைகள் ஆகியவற்றின் விவரங்களைக் குறிப்பிட்டு தத்தமது பகுதி விவசாய சம்மேளனங்களின் ஊடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் உள்ள தெங்குச் செய்கையாளர்கள் மேற்கூறிய விவரங்களை உடனடியாக வழங்குமாறு இப்பகுதி விவசாய சம்மேளன செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஒ-117)

# தாய், சேய் நல கிளினிக்குகள் தென்மராட்சியில் ஆரம்பம்!

தென்மராட்சி,ஜூலை22

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் தாய், சேய் நல சிகிச்சைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன்பிரகாரம் மாதத்தின் முதலாவது வாரத்தின் திங்கட்கிழமை வரணி ஆஸ்பத்திரியில் கர்ப்பவதிகளுக்கான கிளினிக்கும், மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் தாய், சேய் கிளினிக்கும் நடைபெறும்.

புதன்கிழமை கைதடி வடக்கிலும் வியாழக்கிழமை கச்சாய் அம்மன் கோயிலிலும், வெள்ளிக்கிழமை புத்தூர் சந்தியிலும் தாய், சேய் கிளினிக்கும் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கர்ப்பவதிகள் கிளினிக்கும் நடைபெறும்.

இரண்டாவது வாரத்தில் செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பிரதேச சபை அலுவலகத்தில் தாய், சேய் கிளினிக்கும், மூன்றாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமையில் கைதடி ஆஸ்பத்திரியில் தாய், சேய் கிளினிக்கும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் குழந்தைகள் கிளினிக்கும் நடைபெறும்.

புதன்கிழமை மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையத்திலும் வியாழக்கிழமை கெற்பேலி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், வெள்ளிக்கிழமை மிருசுவில் ஆஸ்பத்திரியிலும் தாய், சேய் கிளினிக் இடம்பெறும்.

நான்காவது வாரத்தின் திங்கட்கிழமை வரணி ஆஸ்பத்திரியில் குழந்தைகள் கிளினிக் நடைபெறும்.

இக்கிளினிக்குகளில் குழந்தைகள் மற்றும் கர்ப்பவதிகளுக்கு நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## கல்விச்சாலைக் காட்சிகள்



பொலிஸ் திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்துகொண்ட தென்னிலங்கை பாடசாலை மாணவி ஒருவர் மேற்படி வித்தியாலய மாணவன் ஒருவனுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பொதுநிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த ஜயவீர, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (எ-117)



யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்.புனித மரியாள் வித்தியாலய விளையாட்டு வீரர்கள், வித்தியாலய அதிபர், பிரதி அதிபர் மற்றும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (எ-51)



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி வருடாந்த மெய்வன்மைப் போட்டிக்கு பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

கல்லூரி உப அதிபர் திருமதி உருத்திரா, அதிபர் செல்வி அ.கனகரத்தினம், யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரம், சட்டத்தரணி ந.தங்கராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-173)



குருநகர் ஆவே மரியா பகல் பாலர் பாடசாலைச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியின்போது இடம்பெற்ற 'இசையும் அசைவும்' நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களைப் படத்தில் காணலாம். (எ-51)

## அமைச்சர் ரவியை பதவி நீக்குவதா?

# ஜனாதிபதியின் முடிவை நிராகரித்தார் பிரதமர்!

கொழும்பு,ஜூலை22

அமைச்சர் ரவி கருணாநாயக்காவை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட முடிவை ஏற்க மறுத்துவிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பிரதமரின் அமெரிக்க விஜயத்துக்கு சற்று முன்பதாக தமது முடிவை அவசர கடிதம்மூலம் அவருக்கு அறிவித்தார் ஜனாதிபதி.

ஆனால், ஜனாதிபதியின் முடிவை ஏற்கமுடியாது என்று குறிப்பிட்டு அதற்கு பதில் கடிதம் ஒன்றை எழுதிவிட்டு, "மிகுதியை நான் அமெரிக்காவிலிருந்து வந்த பின்னர் பேசுகிறேன்" என்று கூறி அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

"நாட்டின் தலைவி மட்டுமல்லாமல் அமைச்சரவையினதும் தலைவியான என் மீது அமைச்சர் ரவி கருணாநாயக்க - ஏற்றுக்கொள்ளமுடியாத - சட்ட வலுவற்ற - அபாண்டமான - குற்றத்தைச் சுமத்துகிறார்.

"அவரைத் தொடர்ந்தும் எனது அமைச்சரவையில் வைத்திருக்க என்னால் முடியாது. இதுவிடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?" - என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டிருந்தார்.

அதற்குப் பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில் -

"நீங்கள் குறிப்பிட்டதுபோல உங்களின் மீது அமைச்சர் ரவி கருணாநாயக்க எந்தக் குற்றத்தையும் சுமத்தவில்லை. உங்களது 'கைப்பை' விவகாரம் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன.

"நான் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் எமது கடைசிச் சந்திப்பின் போது எட்டப்பட்ட இணக்கத்தின்படி தீர்வு காணப்படவேண்டிய இந்த பிரச்சினைகள் குறித்துப் பேசலாம்.

"ஆனாலொன்று, கடந்த டிசெம்பர் மாதம் தேர்தலில் வென்று அரசமைக்கும்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டின்படி - அரசமைப்பின் 44(1) (பி) சரத்தின்படி - அமைச்சரவை அமைச்சர்கள் என்ற சிபார்சின் பேரிலேயே நியமிக்கப்பட்டனர் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்" என்று ஜனாதிபதிக்கு விளக்கமளித்திருக்கிறார் பிரதமர். (ஒ)

# களுத்துறைக் கைதிகளின் போராட்டம் தொடர்கின்றது

கொழும்பு,ஜூலை22

தம்மை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகளின் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

உண்ணாவிரதமிருக்கும் 29 கைதிகளும் நேற்று சோர்வடைந்த நிலையில் காணப்பட்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று விடுமுறை நாள் ஆதலால் உண்ணாவிரதமிருப்பவர்களை எவரும் சென்று பார்க்கமுடியவில்லை.

"தங்காலைச் சிறைக் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி அண்மையில் அங்கு மேற்கொண்ட அட்டகாசங்களைத் தடுக்க அங்கு நேரில் சென்ற அமைச்சர் ஜோன் அமரதுங்க எமது பிரச்சினையை தீர்க்க இன்னமும் ஏன் வரவில்லை? அவர் எம்மை உடனடியாகச் சந்தித்து பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்று இந்தக் கைதிகள் கோரியிருக்கிறார்கள். (ஒ-9)

# தமிழுணர்வு ஒருங்கே சங்கமித்த சவேரியார் குருமடத்தின் தமிழ்விழா

யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் 'தமிழ் வளர்த்து மறை வளர்ப்போம்' என்னும் விருதுவாக்குடன் இயங்கிவரும் தனிநாயகம் தமிழ்மன்றத்தின் 'தமிழ்விழா' அண்மையில் நடைபெற்றது.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகிய தமிழ்விழா நிகழ்வுகளில் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா (முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்பல்கலைக் கழகம்) பிரதம விருந்தினராகவும் அதி வணக்கத்துக்கு உரிய யுசெப்பே கவலொத்தோ (பேராசிரியர், ஊர்பன் பல்கலைக்கழ[illegible], ரோமபுரி) கௌரவ விருந்தினராகவும் கலந்துகொ[illegible]ப்பித்தனர்.

மன்றத் த[illegible] குருமட அதிபர், பிரதமவிருந்தினர், கௌரவ விருந்தினர் ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலில் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. இதனை யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் கவின்கலை பயிலக மாணவிகள் நடத்தினர். தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்தில் உருவான "நீ செய்த நாடகமே" என்னும் நாடகம் அருட்சகோதரர்களால் மேடையேற்றப்பட்டது.



'நீ செய்த நாடகமே' நிகழ்வில் ஒரு காட்சி.

இந்நாடகமானது முதியோரை பேணி மதிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நின்றது.

*'முதுமை என்பது மரணத்தைக் காத்திருத்தலல்ல அது மனிதத்தின் பொற்காலம்'*



குருமட அதிபர் அருட்திரு. ஜே.நீககிலஸ் அடிகளார் தலைமையுரை ஆற்றுகின்றார்.

*இளமையில் வாலையில் வயது வந்த வேளையில்*
*வாழ்க்கைச் சோலையில் பறித்த மலர்களை தெரிந்து*
*மாலை தொடுக்கும் சிருஷ்டிப் பருவம்*
*பயனுள்ள பொற்காலம்"* என்ற நாடக வரிகள் முதுமையின் மகிமையை விளம்பிநின்றன.

முதியோரில் ஒரு நூலகமே அடங்கி உள்ளது; முதுமைக்கும் வேலை இருக்கிறது; முதுநிலை பிரஜையும் முக்கியப்படுத்தப்படவேண்டும் என்ற சிந்தனைகளை பலரது உள்ளங்களில் பதியச் செய்த அந்நாடகமானது பலரின் பாராட்டுதலையும் பெற்றது. குருமடத்தின் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இத்தமிழ்விழா நிகழ்ச்சிகளைக் காண அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான மக்கள் சமுகமளித்திருந்தனர்.

**ஜே.நீக்கிலஸ்**

## யுத்தகாலத்தில்

# தப்பிப்பிழைத்த பனைவடலிகள் மக்களிடம் சிக்கி நாசம்!

செம்மணி - நல்லூர் முத்திரைச் சந்தி வீதியில் - வீதியோரங்களில் தப்பிப்பிழைத்து வளர்ந்துவரும் பனம் வடலிகளில் இருந்து மட்டைகளை வழிப்போக்கர்கள் வெட்டி எடுத்துச் செல்கின்றனர்.

ஓலையுடன் மட்டைகளை வெட்டும் அவர்கள் ஓலைகளை அவ்விடத்தில் கழித்துவிட்டு மட்டைகளை மட்டும் சைக்கிள்களில் கட்டிச்செல்வதை அவதானிக்கமுடிகிறது.

வீதியின் இருமருங்கும் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் 'மில்க் வைற்' நிறுவன அதிபரால் நாட்டப்பட்டு பேணிவளர்க்கப்பட்ட பனை வடலிகளே இப்போது அழிவின் விளிம்பில் நிற்கின்றன.

கடந்த காலங்களில் இவ்வீதி பொதுமக்கள் பாவனைக்காக படையினரால் தடைசெய்யப்பட்டிருந்தமையால் இப்பனைமரங்கள் மக்களிடமிருந்து தப்பி வளர்ந்திருந்தன.

ஆனால் இவ்வீதி கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக மக்கள் பாவனைக்கு அனுமதியளிக்கப்பட்டதையடுத்தே அப்பனை வடலிகளுக்கு அழிவுகாலம் ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-31)

### விபத்துகளில் இருவர்காயம்!

இருவேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துகளில் படுகாயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாய் ஒன்று வீதியின் குறுக்கே பாய்ந்ததால் மோட்டார் சைக்கிள் நிலைகுலைந்து விபத்துக்குள்ளானதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ராஜ்கபூர் (வயது 28) என்ற குடும்பஸ்தர் வலது முழங்கை மற்றும் வலதுகால் பகுதிகள் காயமடைந்த நிலையிலும், நேற்றுப் பிற்பகல் கொக்குவில் பகுதியில் இரு மோட்டார்சைக்கிள்கள் மோதுண்டதில் உரும்பிராய், லங்கா லேனைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி சிவகுமார் (வயது51) என்பவர் காலில் காயமடைந்த நிலையிலும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

# எமது பணிக்கு இடையூறு விளைவித்தால் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடையும்!

## தீவக அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

ஊர்காவற்றுறை,ஜூலை22

தீவுப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் அரசியல் பணியினை ஆரம்பிப்பதற்கு கடற்படையினர் தொடர்ந்தும் இடையூறு விளைவித்து வருவார்களானால் அது சமாதான முயற்சியின் அடுத்த கட்ட நகர்வையே முற்றாக ஸ்தம்பிதமடையச் செய்துவிடும்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செங்கண்ணன்.

அனலைதீவில் நேற்று போராளிகளுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பினைத் தொடர்ந்து, அனலைதீவு ஐயனார் ஆலய முன்றிலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:-

தீவுப்பகுதிக்கு அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்காக போராளிகள் அங்கு செல்லவேண்டும் என்ற விடயத்தில் எமது தலைவர் தீர்க்கமாக இருந்தார்.

தீவுப்பகுதிக்குச் செல்வதற்கு கடற்படையினர் தொடர்ந்து தடுத்திருப்பார்களேயானால் அது தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் பேச்சுக்களைக் கூட புறந்தள்ளியிருக்கும்.

இது குறித்து நோர்வேத் தூதுவரிடம் நாம் வலியுறுத்தியிருந்தோம்.

நாங்கள் முதன்முதலாக தீவகத்திற்கு வருகைதந்தபோது மண்டைதீவிலும், அல்லைப்பிட்டியிலும் வைத்து கடற்படையினர் எம்மை உள்ளே செல்லவிடாது தடுத்து நிறுத்தினர்.

அப்போது அவர்கள் எமது சயனைட் குப்பிகளையும் வோக்கிடோக்கிகளை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு கூறினர்.

இதற்கு, கடற்படையினர் கூறிய காரணங்கள் வேடிக்கையானவை. சயனைட் குப்பிகளை எடுத்துச்செல்லும் புலிகள் அவற்றைப் படையினர் பயன்படுத்தும் தண்ணீருக்குள் கலந்து அவர்களைக் கொலைசெய்துவிடுவார்கள் என்பதாகும். புலிகள் வோக்கிடோக்கிகளை எடுத்துச் செல்வார்களானால் அதைப் பயன்படுத்தி ரிமோட்கொன்ரோல் மூலம் தம்மீது கண்ணிவெடித் தாக்குதலை நடத்துவார்கள் என்று கூறினார்கள்.

விடுதலைப் புலிகள் சாத்தியப்பட முடியாது என்று கூறப்படும் இடங்களுக்கெல்லாம் சென்று தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவர்கள். கட்டுநாயக்கா விமானதளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை எவரும் மறந்துவிடமாட்டார்கள்.

நீண்டகாலமாக கடற்படையினரதும், ஈ.பி.டி.பியினரதும் பல்வேறு கெடுபிடிகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் இருந்தவர்கள் நீங்கள். அதற்கு மத்தியிலும் நீங்கள் இன்று பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்து அளித்த வரவேற்பைக் கண்டு எமக்கு மெய்சிலிர்க்கின்றது.

இவ்வாறு பல அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் இவ்வாறு பொதுமக்கள் திரளுவார்கள் என்பதை நாம் எதிர்பார்க்கவில்லை.

இந்தப் பிரதேசம் ஆரம்பகாலத்தில் இருந்தே எமது போராட்டத்திற்கு அடித்தளமாக விளங்கிவந்துள்ளது. அதேபோன்று; இந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் போராட்டத்திற்காக பல்வேறு தியாகங்களைப் புரிந்துள்ளனர்.

இக்கூட்டத்தில் அரசியல்துறையைச் சேர்ந்த அருந்தவன், கிராம சேவை அலுவலர் பொ.அன்பழகன் ஆகியோரும் உரையாற்றினர்.(எ-16)

### மற்றொரு 'பவுஸர்' பெற்றோலுடன் வந்தது

ஏ-9 தரைவழிப்பாதை ஊடாக இரண்டாவது தடவையாக 33ஆயிரம் லீற்றர் பெற்றோல் பவுசர்மூலம் நேற்று முன்தினம் குடாநாட்டிற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களின் பின்பு கடந்த 17 ஆம் திகதி இரு பவுசர்கள்மூலம் 66 ஆயிரம் லீற்றர் பெற்றோல் பரீட்சார்த்தமாக எடுத்து வரப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து தற்போது இரண்டாவது தடவையாகவும் தரை வழிப்பாதை ஊடாகப் பெற்றோல் எடுத்துவரப்பட்டுள்ளது. (ஓ-10)

## கசிப்பு உற்பத்தி செய்ததற்காக

# நான்கு பேரிடம் தண்டப்பணமாக ஒரு லட்சத்து 39 ஆயிரம் அறவீடு!

வலி.வடக்கு,ஜூலை22

சட்டவிரோதமான முறையில் கசிப்பு வைத்திருந்தமை, கோடா வைத்திருந்தமை, உற்பத்தி செய்தமை, அதற்குரிய உபகரணங்கள் வைத்திருந்தமைகளுக்காக கடந்த வாரம் நான்கு பேருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் ஒரு லட்சத்து 39 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலீஸாரால் ஒரு போத்தல் கசிப்பு மற்றும் 100 போத்தலுக்கு மேற்பட்ட கோடா, அதற்குரிய உபகரணங்களுடன் கைது செய்யப்பட்ட ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த முத்து அருமைநாயகம் என்பவருக்கு 33 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டு, அதில் அரைப்பங்கு பொலீஸ் வெகுமதி நிதியத்துக்கு வழங்கப்பட வேண்டும் - என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

எதிரி 15 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 15ஆயிரம் ரூபா மன்று ஏற்கும் ஆட்பிணையிலும் விடுதலைசெய்யப்பட்டார்.

சங்கானைப் பொலீஸாரால் 255 போத்தல் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்ட சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த நாகமணி தங்கராசா என்பவருக்கு 25ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், அபராதத் தொகையில் அரைப்பங்கு பொலீஸ் வெகுமதி நிதியத்துக்குச் சேரவேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் எதிரி, 2 வருடத்திற்கு பொலீஸாரின் கண்காணிப்பில் இருப்பதுடன், ஒவ்வொரு மாத கடைசி ஞாயிற்றுக்கிழமையும் பொலீஸில் சென்று கையொப்பமிடவேண்டும் என்றும் மல்லாக மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு கட்டளையிட்டுள்ளார்.

மானிப்பாய் பொலீஸாரால் 18 போத்தல் கசிப்பு, 347 போத்தல் கோடா மற்றும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்ட ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் செல்வதாஸ் என்பவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், அரைப்பங்கு பொலீஸ் வெகுமதி நிதியத்துக்கு வழங்கவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டு, எதிரி 20 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 20ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் விடுதலை செய்யப்பட்டார்.

எதிரி உரிய தொகையை கட்டாமையினால் விளக்கமறியலில் வைக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலீஸாரால் 73 போத்தல் கோடா மற்றும் உபகரணங்களுடன் கைதுசெய்யப்பட்ட குப்பிளான் தெற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த வெற்றிவேல் செல்வராசா என்பவருக்கு 37 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டு 10ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25ஆயிரம் ரூபா மன்று ஏற்கக்கூடிய ஆட்பிணையிலும் விடுதலை செய்யப்பட்டார். (எ-86)

# பௌத்த சிங்களவரின் நாடு இது என்று கூறுவதால் பிரச்சினை தீராது

**இந்நாட்டில் அரசியல் குறித்து அதிரடியான கருத்துக்களை வெளியிடுவதில் அருட்தந்தை பெனடிக்ற் ஜோசெப் அவர்கள் பிரபலமானவர். பலகாலமாக சிங்கள மொழியில் வெளியாகும் "ஞானார்த்த பிரதீபய" என்ற பத்திரிகையின் ஆசிரியரான அருட்தந்தை தற்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்துத் தெரிவித்த கருத்துக்களின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

*கேள்வி:* அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் புலிகளுக்கு ஈழம் அமைத்துக் கொடுப்பது போன்றுள்ளதெனச் சிலர் கூறுகிறார்களே, இதுபற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்ட முன்னைய அரசுகள் ஒவ்வொன்றும், நேர்மையுடன் முயற்சித்தன என்றே நான் கருதுகின்றேன். இந்த அரசுகூட அப்படியே. ஆகவே பொய்யான சமாதானத்துக்கு முயல்வதாக அரசு காட்டிக்கொள்கிறது என நான் எண்ணவில்லை.

*கேள்வி:* அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்து நாட்டு மக்களுக்குச் சந்தேகம் இருப்பது தெரிகிறது அல்லவா?

*பதில்:* சமாதான முயற்சிகள் குறித்துப் பொதுமக்களிடையே சந்தேகம் நிலவுகிறதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், நாட்டு மக்கள் சமாதானத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் நாட்டுமக்கள் சமாதானத்தின் தேவை கருதிச் செயற்பட்டனர். பொதுசன ஐக்கிய முன்னணி புலிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளதென அந்த நேரத்தில் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. சமாதானம் பற்றிய பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த நாட்டு மக்கள் அந்தக் கதைகளைக் கணக்கெடுக்கவில்லை. அப்படியான கதைகள் பரப்பப்பட்டபோதும் ஐக்கிய தேசிய முன்னணி தேர்தலில் வெற்றியீட்டியது. இதனாலேயே பொதுமக்கள் சமாதானத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருக்கிறார்கள் எனக் கூறுகின்றேன்.

*கேள்வி:* அப்படியாயின் எதிர்க்கட்சியினர் அரசின் சமாதான முயற்சிகளை ஏன் விமர்சிக்கின்றார்கள்?

*பதில்:* இவைபற்றி நன்னோக்குடன் ஆராய்ந்து பார்க்க நாம் பழகிக் கொள்ளவேண்டும். சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகள் எனக் கூறப்படுபவர்களும் செயற்படுகின்றனர். அவர்களுக்குப் பொறுமை கிடையாது. ஏனைய விடயங்களைப் போன்றே, இதுபோன்ற தீர்க்கமான வேளையிலும்கூட அரசியல் ஆதாயம் தேடிக்கொள்வதற்கு இத்தரப்பினர் முயற்சி செய்கின்றனர். அவர்கள் எப்போதும் ஒரே கருத்தையே சொல்கிறார்கள். இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தம் எனக் கூறிக்கொள்வதால் பிரச்சினையை என்றுமே தீர்க்கவியலாது.

*கேள்வி:* புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம், நாட்டின் வடக்குக் கிழக்கு பிரதேசங்களுக்கு இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு ஒப்புக்கொண்டதன்மூலம், இந்த நாடு சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என அரசு ஏற்றுக்கொண்டுள்ளதல்லவா?

*பதில்:* இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தும் தீர்மானத்தால் மட்டுமல்ல, சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்படும் சிரமங்களையும் வெளிப்படுத்துவதன்மூலம் அரசு அப்படிக் காட்டிக்கொள்கிறது. அதுபோன்றே நாடு சிங்கள பௌத்தர்களுக்கே உரியதெனக் கூறிக்கொள்ளும் கட்சிகளைப் படுதோல்வியுறச் செய்து கடந்த பொதுத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கே வாக்களித்தனர். ஆகவே, இந்த நாட்டில் வாழும் சிங்கள பௌத்த மக்கள் நீங்கள் குறிப்பிட்ட கட்சியினர் போன்று இனவாதிகளோ, மதவாதிகளோ அல்லர்.

*கேள்வி:* ஈழம் என்பதற்கு இடப்பட்டுள்ள நற்பெயர் மட்டுமே இடைக்கால நிர்வாகம் என்பது சிலரது கருத்தாகும். இடைக்கால நிர்வாகம் என்பது ஈழத்தைத் தவிர வேறெதுவுமில்லை என்ற கருத்துக் குறித்து தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

*பதில்:* இதுகுறித்து பெரும் தவறாக அர்த்தம் கொள்வதாக எனக்குத் தோன்றுகிறது. அரசாங்கம் இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்தப்படுமெனக் கூறியபோதிலும், அதில் அடங்கும் சரத்துக்கள் எவை என்பது பற்றி இதுவரையில் அரசுக்கோ, புலிகளுக்கோ தெரியாது. புரிந்துணர்வு ஒப்பந்தமென்பது சமாதான நடவடிக்கையின் முடிவான உடன்பாடல்ல. அது ஆரம்ப உடன்பாடுமல்ல. பேச்சுக்களுக்குத் தயார்ப்படுத்திக்கொள்வதும், சந்தேகங்களைக் குறைப்பதுமே இதன் நோக்கமாகும். அதில் கூறப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்துக்குரிய அதிகாரங்கள் பற்றி நடைபெறவிருக்கும் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்படும். அதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் பற்றி விமர்சிப்பதற்குக் காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை.

*கேள்வி:* ஆனாலும் இப்போதெல்லாம் பலர் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்; விவாதங்கள் நடத்துகிறார்கள். இவற்றைத் தாங்கள் பம்மாத்துக்கள் எனக் கூறுகிறீர்களா?

*பதில்:* நான் அவ்வாறுதான் எண்ணுகிறேன். தங்களது எண்ணத்தில் தோன்றுபவற்றை எழுதியோ, பேசியோ அக்கருத்துக்கள் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமானவை என பொது மக்களை ஏமாற்றுவதற்கென்றே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களது இச்செய்கை யானையின் உருவம் எப்படியிருக்குமெனக் குருடனுக்கு விளக்குவது போன்றதாகும். அவர்கள் சொற்சிலம்பம்போல் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிக்கின்றனர்.

*கேள்வி:* பிரபாகரன் உட்பட புலிகளின் தலைவர்கள், சென்ற ஏப்ரல் 10ஆம் திகதி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஈழக்கோரிக்கையைக் கைவிடப்போவதில்லையெனப் பிரபாகரன் கூறியுள்ளார். அதுபோன்று இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுமெனப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அரசு இணங்கியுள்ளது. அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு நிலவுவதால் புலிகள் கோரும் ஈழமும், அரசு வழங்க இருக்கும் இடைக்கால நிர்வாகமும் ஒன்றே என்ற சந்தேகம் நியாயமானதாகத் தோன்றவில்லையா?

*பதில்:* இது பூதாகரமான ஒரு பிரச்சினையல்ல. ஈழக் கோரிக்கையைக் கைவிடப்போவதில்லையெனப் பிரபாகரன் கூறியது உண்மையே. அதேபோன்று, ஈழக் கோரிக்கை தவிர்ந்த மற்றெதனைப் பற்றியும் பேசத் தயாராயிருப்பதாக அரசும் கூறியுள்ளது. ஈழத்துக்கு மாற்றீடாக இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுமென அரசு கூறியதும் இதனாலேயேயாகும். அந்த ஆலோசனை புலிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவேதான் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட விரும்புகிறார்கள்.

*கேள்வி:* இருதரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட விரும்புவதால் புலிகள் தங்களது ஈழக்கோரிக்கையைக் கைவிடுவார்கள் எனத் தாங்கள் கூறுகிறீர்களா?

*பதில்:* நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

*கேள்வி:* எப்படி ஒரே தடவையில் அவ்வாறு நினைக்கிறீர்கள்?

*பதில்:* ஒரு தடவையில் அல்ல. நியாயமாக, தர்க்கரீதியாக எடுத்துக் கொண்டால்கூட அப்படித்தான் தோன்றுகிறதல்லவா? அரசாங்கம் ஈழம் வழங்கத் தயாராயில்லாத நிலையிலும் புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதாகக் கூறுவதிலிருந்து அது புரிகிறதல்லவா? பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது எல்லாக் கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்கல்ல. தங்கள் கோரிக்கைகளில் பெருமளவைப் பெற்றுக் கொள்வதற்கே. எனவே, அந்த நிலையில் புலிகள் ஈழக்கோரிக்கையைக் கைவிடக்கூடும்.

*கேள்வி:* தனியான காவல்துறை, நீதிமன்றம், வங்கி ஆகியவற்றைப் புலிகள் பேணுகிறார்கள். நிர்வாக நடைமுறைகளைக் கொண்டிருக்கிறார்கள். இடைக்கால நிர்வாகத்தில் இவை யாவற்றையும் புலிகளால் கைவிடமுடியாதல்லவா?

*பதில்:* இருபது ஆண்டுகளாகப் புலிகள் ஈழத்தை அடைவதற்காக காடுகளில் இருந்து போர்புரிந்தனர். தமக்குப் பொருத்தமான நிர்வாகத்தை உருவாக்கவே போர்புரிவதாகத் தமது ஆதரவாளர்களுக்குக் கூறினார்கள். ஆகவே, எல்லாவற்றையும் கைவிட அவர்களால் முடியாது. ஆயினும் புலிகள் யுத்தத்தைக் கைவிட நேரிடும்.

*கேள்வி:* புலிகள் ஏன் யுத்தத்தைக் கைவிடவேண்டும்?

## பெரும்பான்மை இனத்தவரே இதனை ஏற்கவில்லை

*பதில்:* இப்போது புலி உறுப்பினர்கள் சாதாரண மக்களுடன் சேர்ந்துள்ளதால் மக்களின் சுதந்திரமான வாழ்வு நடவடிக்கைகளை காண்கிறார்கள். அவர்கள் காடுகளில் இருந்து போரிட்டவர்களல்லவா? மனிதர்களுடைய மனங்கள் வெறும் கலசங்கள் அல்ல. அவற்றில் எதிர்பார்ப்புக்கள் உண்டு. அவை நாளாவட்டத்தில் எப்படியாவது வாழ்க்கை கலாசாரத்துடன் இணைந்து கொள்ளும். இப்போது புலி உறுப்பினர்களிடையேயும் அவ்வெதிர்பார்ப்பு வளர்ந்துள்ளது. மனித உணர்வுகளுக்கு விடையளித்துவிட்டு காடுகளில் வசிப்பதைவிட இவ்வகை வாழ்க்கை முறை சிறந்ததெனப் புலி உறுப்பினர்கள் நினைப்பதை உணரமுடிகிறது.

*கேள்வி:* இருப்பினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் புலி உறுப்பினர்களால் மீறப்படுகின்றனவே. சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்தல், கப்பம் பெறுதல், முஸ்லிம்களை விரட்டுதல் போன்றவை இன்னும் நிறுத்தப்படவில்லை. எனவே புலிகள் மீண்டும் ஆயுத மோதல்களை ஆரம்பிக்க முயல்கிறார்கள் என்பதாக இது கருதப்படுகிறதா?

*பதில்:* இதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.

பல ஆண்டுகளாகப் பழக்கப்பட்ட நடவடிக்கைகளிலிருந்து மீளுதல் எவருக்கும் கடினமானது. காட்டு வாழ்க்கை முறையினின்றும் மாறுவதற்கு புலிகளுக்கு இன்னும் முடியாமலுள்ளது என நான் எண்ணுகின்றேன். ஆனால், பெரும் ஆயுதத் தாக்குதல் நடவடிக்கைகள் எதிலும் விடுதலைப் புலிகள் இப்போது சம்பந்தப்படவில்லை. அதுபற்றி சந்தோஷப்பட எங்களால் ஏன் இயலவில்லை? ஏன் எப்போதும் நாம் பாதகமாகவே சிந்திக்கின்றோம்?

*கேள்வி:* இப்போது புலிகள் வன்முறை வழியிலிருந்து மாறி, சாத்வீக வழிக்கு மாறியுள்ளார்கள் எனக் கூறுகிறீர்களா?

*பதில்:* புலிகள் முழு அளவில் பிரச்சினைகளை நம்பிக்கையுடன் அணுகவில்லை என்பது உண்மைதான். ஆயினும் இரு பகுதியிலும் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் புலிகளிடம் நம்பிக்கை உள்ளது.

*கேள்வி:* சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கபடவேண்டுமெனக் கோருவது அவ்வகையான வற்புறுத்தலா?

*பதில்:* தடையை நீக்கக் கோருவது குறித்துப் பிரச்சினைகள் உள்ளன. தடைநீக்கம் தங்களுக்குக் கௌரவத்தை ஏற்படுத்தும் என விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள். அது அவசியமற்றதொன்றென அரசு கருதுகிறது என நான் நினைக்கிறேன். அரசு புலிகளுடன் பேச முன்வந்ததானது அது புலிகளை அங்கீகரிப்பதாக அமையுமென அரச தரப்பினர் கருதுகின்றனர். எப்படியிருப்பினும் இவ்வாறான விடயங்களுக்குத் தேவைக்கு அதிகமாக முன்னுரிமை அளித்தால் முக்கியமான விடயம் குறித்து செலவிடப்படும் நேரம் விரயமாகிவிடும்.

*கேள்வி:* வடக்கு - கிழக்கிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்வது பற்றிய தங்கள் கருத்து என்ன?

*பதில்:* வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளிலும், வணக்கத் தலங்களிலுமுள்ள பாதுகாப்புப் படையினர் மட்டுமே விலக்கப்படுகின்றனர். மறுபுறத்தில் முகாம்களுக்குப் பதிலாக வேறு முகாம்கள் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறதே. இதனால் பாதுகாப்பு இல்லாமல் போகிறது என்று கூறுவது அநாவசிய பயம் என்றே நினைக்கிறேன்.

*கேள்வி:* புலிகள் சமாதானத்துக்கு முன்வந்தது அமெரிக்காவின் அழுத்தங்கள் காரணமாக எனக் கூறப்படும் கூற்றுப்பற்றி நீங்கள் யாது கூறுகிறீர்கள்?

*பதில்:* அமெரிக்காவில் ஏற்பட்ட தாக்குதலின் பின்னர் உலகம் முழுவதிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான பிரசாரத்தின் தாக்கம் புலிகளுக்கும் உண்டு. அதுவும் ஒரு காரணம் ஆகும்.

*கேள்வி:* அமெரிக்க யுத்தக் கப்பல்கள் இலங்கைக்கு வந்ததும், அமெரிக்காவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய முன் வந்ததும் இலங்கையின் பாதுகாப்பில் அமெரிக்கா தலையிடுவதாகக் காட்டுகிறதா?

*பதில்:* அமெரிக்காவுடன் இலங்கை கொண்டுள்ள நட்புறவைத் தவறாக அர்த்தம் செய்து கொண்டதனால் இது போன்ற ஐயங்கள் உருவாகின்றன. தற்போதுள்ள உலக நிலைவரத்தின்படி பார்க்கையில் இது பாரிய அச்சுறுதல் அல்ல. ஸ்ரீலங்காவின் விடயங்களில் அமெரிக்கா கைபோடவில்லை.

*கேள்வி:* ஸ்ரீலங்காவின் கலாசாரத்தைச் சீரழிக்கும், தேசியத்தைச் சீரழிக்கும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் கிறிஸ்தவத் தேவாலயங்கள் உதவி செய்துவருவதாகவும், பக்கச்சார்பாக நடந்து கொள்வதாகவும் கருத்து நிலவுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

*பதில்:* சமாதானத்தைப் போலவே வேறு தேசியப் பிரச்சினைகளிலும் கத்தோலிக்க சபை மீது குற்றம் சுமத்துவது சர்போது வழக்கமாகி விட்டது. நாட்டில் சமாதானம் நிலவ எங்கள் கத்தோலிக்க சபை தினமும் பிரார்த்தித்து வருகிறது; மனித அழிவுகளைக் கண்டித்துவருகிறது; அவற்றை அருவருத்து வெறுத்து வருகிறது. அதுபோலவே நாட்டில் அனைத்து இனங்களும் சம அந்தஸ்துகளுடன் வாழ்வதற்கான உரிமைக்காக எப்போதும் குரல் எழுப்புகிறது. ☆

**தமிழில்: வீயெஸ்ரீ**

---

# சைவப்புலவர் சங்க பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

அகில இலங்கைச்சைவப்புலவர் சங்கம் நடத்திய இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் பட்டப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### இளஞ்சைவப் புலவர்

2ஆம் பிரிவில்: பாலசுப்பிரமணியம் பத்மநாதன்(ஏழாலை), உஷாஜினி யோானந்தம் (அல்வாய்), ரேவதி பரமநாதன் (ஆனைக்கோட்டை), துளசிமலர் வைத்தி (சாவகச்சேரி) ஆகியோரும் -

மூன்றாம் பிரிவில்:- சாந்தினி வாமதேவன் (சுழிபுரம்), ஜெயரட்ணராசா சிவக்கொழுந்து (சுழிபுரம்), யோகிவதனா தில்லையம்பலம் (சுழிபுரம்), சங்கீதா சதாசிவசர்மா (நீர்வேலி), பார்மதி குமாரசாமி (சுன்னாகம்), த.சிவசக்தி (கோப்பாய்), தேவதாசன் வனிதராணி (நெடுந்தீவு) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

### சைவப்புலவர்

2 ஆம் பிரிவில்:- லிங்கநாயகம் ரமணன் (நெடுந்தீவு), சண்முகலிங்கம் முகுந்தன் (இணுவில்), மயில்வாகனம் சிவலிங்கம் (கோண்டாவில்), சிவகுருநாதர் சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), குலசிங்கம் நஜீவன் (சுன்னாகம்) ஆகியோரும்-

மூன்றாம் பிரிவில்:- கிட்டினர் சிவமணி (யாழ்ப்பாணம்), சுபாஜினி தம்பிராஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்குரிய பரீட்சை முடிவுகள் யாவும் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

---

## திருமலையில் இளைஞர் சுட்டுக் கொலை!

திருகோணமலை,ஜூலை22

திருகோணமலை மட்கோ பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரியால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வெளியே சென்றுவிட்டு ஓட்டோவில் வீடு திரும்பியவரை அவரது வீட்டின் முன்பாக வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ம)



யாழ். இலக்கிய வட்டம் அண்மையில் நடத்திய 'புதுமைலோனின் சிறுகதைகள்' நூல் வெளியீட்டுவிழாவில், எழுத்தாளர் 'சிற்பி' புதுமைலோலனின் சகோதரியிடம் பிரதி வழங்கினார். அந்நிகழ்வில் எடுத்த படம் இது. அருகில் யாழ். இலக்கிய வட்டத் தலைவர் செங்கையாழியனும், நூல் ஆசிரியர் புதுமைலோலனும் காணப்படுகின்றனர்.

# கல்லுண்டாயில் காவலரண்கள் புதிதாக அமைப்பு!

கல்லுண்டாய்வெளிப் பகுதியில் படையினர் புதிதாக காவலரண்கள் அமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

சுமார் 150 மீற்றர் தூரத்திற்கு ஒன்றாக, 25 இற்கு மேற்பட்ட காவலரண்கள் இவ்வாறு அமைக்கப்பட்டு வருகின்றன.

கல்லுண்டாய், அராலிப் பகுதிகளில் உள்ள பெருமளவு பனை மரங்கள் அழிக்கப்பட்டு அவற்றினைக் கொண்டே இந்த காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (எ-73)


## கரிதாஸ் - கியூடெக் சமாதானக் குழு நடத்தும்
## சமாதான விழிப்புணர்வு பேச்சு / கட்டுரைப் போட்டிகள்

கட்டுரைப்போட்டி:

"சுபீட்சமான வாழ்வுக்கு இனப் புரிந்துணர்வும், சமாதான விழிப்புணர்வும் அவசியம்"

400-450 சொற்களில் மேற்கூறிய கருவைக் கொண்டு கட்டுரை ஆக்கப்படவேண்டும.

பேச்சுப்போட்டி:

"அவலங்கள் அழிய அவசியம் சமாதானம்" எனும் தலைப்பின் கீழ் 3-5 நிமிடங்கள் பேசவேண்டும்.

போட்டி விதிகள்:

1. மாணவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்குபற்றமுடியும்.
2. ஒருவர் இரு போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
3. கட்டுரை ஏற்கும் இறுதித்தினம் / பேச்சுப்போட்டி நடைபெறும் தினம் } 01.09.2002
4. பேச்சுப்போட்டிக்கு 14. 08. 2002 இற்குமுன் விண்ணப்பிக்கவும். போட்டி நடைபெறும் இடம், நேரம் என்பன போட்டியாளர்களுக்கு அறிவிக்கப்படும்.
5. இரு போட்டிகளுக்கும் நடுவர்களது தீர்ப்பே இறுதியானது.
6. கட்டுரை ஆக்கமும், பேச்சுப் போட்டி விண்ணப்பமும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

"சமாதான பேச்சு / கட்டுரைப் போட்டி"
இயக்குநர்,
மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்),
மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

இப்போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

- சமாதானக்குழு, கியூடெக்.

(6223)



## ஜே.கே அரங்கள்



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற. பெறுமதிக்கு பொருத்தமான. ஜே.கே அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

ஜெனரல் எக்கியூப்மன்ட்ஸ் லிமிடெட்

316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-12.
போன்: 345046, 327264, 343822, 430799 பெக்ஸ்: 434637

(C-22950)


# மருதங்கேணியில் 200 வீடுகள் அமைக்கப்படும்!

வடமராட்சி கிழக்கு,ஜூலை22

மருதங்கேணிப் பிரதேசத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புதிதாக 200 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

யுத்தத்தினால் இந்தப் பகுதியில் உள்ள வீடுகள் பலவும் முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.இதனால் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் குடிசைகளை அமைத்து வசித்து வருகின்றனர்.(எ-182)


## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 3081 (C-22823)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(5659)


# தேசிய மட்டப் போட்டிக்கு 3 தீவக மாணவர் தெரிவு

காரைநகர்,ஜூலை22

திருகோணமலையில் கடந்த வாரம் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில், தீவக கல்வி வலயத்தில் இருந்து கலந்துகொண்ட நால்வரில் மூவர் அகில இலங்கை ரீதியான போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். புஸ்பலிங்கம் 17 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் உயரம் பாய்தலிலும், அதே பாடசாலையைச் சேர்ந்த வே.சிவதாரணி 21 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியிலும் -

நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தைச் சேர்ந்த க.ரதீஸ்கரன் 21 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் முப்பாய்தலிலும் -

வெற்றி பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (எ-73)

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1912 - 04 - 22



மறைவு
2002 - 05 - 25

### திருமதி அன்னலட்சுமி இளையநம்பி


**அம்மா, நீங்கள் இவ்வுலகில் இருந்து மறைந்து போனாலும் எங்கள் உள்ளங்களிலிருந்து மறையமாட்டீர்கள். எம் நல்வாழ்வுக்காக உங்களையே உரமாக்கிய அந்த நாள்களின் நினைவுகளை என்றும் போற்றிப் பாதுகாப்போம்.**

திருமதி அன்னலட்சுமி இளையநம்பி அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அளவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் *நாளை (2002. 07. 23) செவ்வாய்க்கிழமை மு. ப. 11. 00 மணியளவில்* நடைபெறும். அந்நிகழ்விலும், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புளவதரை,*
*அளவெட்டி.* (6213)

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய, மறுசீரமைக்கப்பட்ட
## அதிவிசேட உயர்தொழில்நுட்ப இயந்திரங்கள் நியாய விலையில்....



ஹொட் பிரிண்டர்
HOT PRINTER




லெமினேட்டிங் இயந்திரம்
LAMINATING MACHINE


BMICH இல் 24 முதல் 27 வரை "PRINT 2002" கண்காட்சி




தன்னியக்க கட்டும் இயந்திரம்
AUTO TYING MACHINE



புத்தகம் தைக்கும் இயந்திரம்
THREAD SEWING MACHINE



பேப்பர் வெட்டும் இயந்திரம்
PAPER CUTTING MACHINE



ஓப்செட் அச்சு இயந்திரம்
OFFSET MACHINE

## ஷெலோன் மெஷினரி அண்ட் சர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

பேப்பர்கொம் குறூப்பின் அங்கத்தவர்

25,16 ஆவது ஒழுங்கை, வித்தியாலய வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 384500 பக்ஸ்: 449781 (C/22969)

PICCASO

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரங்கள் - நம்பிக்கையுடன் கூடிய சேவை.

## சட்டவிரோத மின்பாவனையாளர் சிக்கினர்

கரவெட்டி,ஜூலை22

வடமராட்சி, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் மின்சார சபையின் பருத்தித்துறை அலுவலகத்தினரும், நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனையின்போது சட்டவிரோத மின்சார பாவனையாளர் சிலர் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது. அவர்களிடமிருந்து சட்டவிரோத மின் பாவனைக்கு பயன்படுத்தப்பட்ட மின்சார உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சட்டவிரோத மின்பாவனை தொடர்பாக பிடிபட்டவர்கள் நீதிமன்றத்தில் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்களை எச்சரித்த நீதிவான் பொருள்களை பறிமுதல் செய்ததோடு தலா 5000ரூபா அபராதமும் விதித்தார். (ஒ-70)

## ஹோட்டல் பாடசாலைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் பாடசாலையின் பயிற்சிநெறிக்கு 2ஆவது தொகுதி மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் கோரப்படவுள்ளதாக பாடசாலையின் உபஅதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது தொகுதி மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் விரைவில் பூர்த்தியடையவுள்ளதாகவும், இப்பயிற்சிநெறியை 16மாணவர்கள் பூர்த்தி செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'விரிவுரையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவியபோதும் தற்பொழுது அது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் அதிக மாணவர்களைப் பயிற்சிக்கென்ச் சேர்த்துக் கொள்ளமுடியும்' என்றும் அவர் கூறினார். (ஒ-10)

## கறுப்பு ஜூலை தினத்தை நாளை துக்க தினமாக அனுஷ்டியுங்கள்!

கறுப்பு ஜூலை தினமான நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் துக்க தினம் அனுஷ்டிக்குமாறு விடுதலைப் புலிகளின் மட்டு., அம்பாறை அரசியல் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்:

நாளைமுதல் எதிர்வரும் சனிக்கிழமைவரை களியாட்ட நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு -

வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மற்றும் வாகனங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் - கேட்டுள்ளது.(ம-9)

## பகிஷ்கரிப்பு

அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு பிரதேச பாடசாலை மாணவர் ஒன்றியத்தினர் இன்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர். அண்மையில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தில் தமது ஆலையடிவேம்புப் பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

## 'பிற்' மாணவருக்கு விசேட பரீட்சை

கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவால் கடந்த 30ஆம் திகதி நடத்தப்பட்ட தகவல் தொழில் நுட்பமாணி (BIT) தெரிவுப் பரீட்சையில் தோற்றத் தவறிய மாணவர்களுக்கான விசேட தெரிவுப் பரீட்சையொன்று எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்றத் தவறிய மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக ஐஐஎஸ் தலைமையகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (-9)

## சாவகச்சேரியில் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும் படையினர் வசம் உள்ள 60 வீடுகளில் இருந்து 2,3 மாதங்களில் படையினர் விலகிவிடுவர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், ஜி.ஜி.பொன்னம்பலம் கஜேந்திரகுமார் சகிதம் கோயிலாக்கண்டி, தனங்களப்பு ஆகிய பகுதிகளில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களுக்கு சென்றார். அந்தப் பகுதியில் உள்ள வயல் பகுதிகளுக்கும், கடற்கரைப் பகுதிக்கும் சென்ற அவர் அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

அதைத் தொடர்ந்து சாவகச்சேரியில் நடந்த கூட்டத்தில் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

- குடாநாட்டில் பனை மரங்கள் தறிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. படையினரோ அல்லது வேறு எவரோ பனை தறிப்பதை உடன் நிறுத்த வேண்டும். இதற்கான உத்தரவை யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உடன் விடுப்பார்.
- தனங்களப்பில் உள்ள நெற்செய்கை வயல்களில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்படும். சில கட்டுப்பாடுகளுடன் மூன்றில் இரண்டு பகுதி நிலத்தில் விவசாயம் செய்ய சிபார்சு செய்வேன். இது தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் - என்றார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமது தந்திரோபாய செயற்பாடுகளுக்காக அதியுயர் பாதுகாப்பு வலயங்களை படையினர் உருவாக்கியுள்ளனர். இரகசியம் பேணப்படுவதற்காகவே அவர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதில் நாம் தலையிடமுடியாது.

தனங்களப்புப் பிரதேசத்தை அதியுயர் பாதுகாப்பு வலயமாக படையினர் பாதுகாத்து வருவதற்குக் காரணம், முன்னர் புலிகள் அந்தப் பகுதி ஊடாக ஊடுருவியதுதான். மீண்டும் அத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்கவே அங்கு பாதுகாப்பு வலயம ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்பாட்டில் விதந்துரைத்துள்ள கட்டுப்பாடுகளின் கீழ் தனங்களப்புப் பிரதேசத்தில் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்படும். கடற்றொழிலாளர்களும் படையினரும் இணைந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறியுள்ளனர். அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் உள்ள 51 பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகளில் இருந்தே படையினர் வெளியேற வேண்டியுள்ளது. வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய அவ்விரு பாடசாலைகளில் இருந்தும் ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்கு முன் படையினர் வெளியேறுவர்.

படையினர் அந்தப் பாடசாலைகளில் இருந்து வெளியேறினாலும் மாற்று ஏற்பாடாக அவற்றின் அருகில்தான் தங்கியிருக்க வேண்டியுள்ளது. வேறு இடங்களில் புதிய முகாம்களை அமைக்க இடமும் இல்லை; நிதியும் இல்லை. எனவே, படையினருடன் பரஸ்பரம் நல்லுறவைப் பேணும் வகையில் இந்த மாற்று ஏற்பாடுகளை மக்கள் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

சமாதான முயற்சிகளில் முதல்படியில்தான் நிற்கிறோம். நாளை சமாதானம் ஏற்பட்டால் உடன் சகல படையினரையும் வாபஸ் பெற்றுவிடுவோம்.

சமாதானத்தை எட்டுவது கஷ்டமான விடயம்தான். ஆனால், சமாதானத்தை ஏற்படுத்தத்தான் வேண்டும். அதற்கு சகலரின் பங்களிப்பும் அவசியம் தேவை.

கடந்த 7 மாத காலத்தில் புலிகள் நல்ல முறையில் செயற்படுகின்றனர். அவர்கள் மீது நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசுத்தரப்பினரும் படையினரும் புலிகளின் பிரமுகர்களான தமிழ்ச்செல்வன், கரிகாலன் உட்பட முக்கிய தலைவர்களுடன் நல்ல உறவைப் பேணி வருகின்றனர்.

கரிகாலன் என்னுடன் தொலைபேசியில் பல விடயங்கள் குறித்து உரையாடி வருகின்றார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மூன்று பிரமுகர்களை எனது வீட்டுக்கு அழைத்துக் கலந்துரையாடியுள்ளேன். புலிகள் படையினரை மதிக்கிறார்கள்.

தென்மராட்சியில் பெருந்தோட்டப் பகுதியில் கண்ணிவெடிகள் உள்ளன. அவை அகற்றப்பட்ட பின்பே அங்கு மக்கள் செல்ல அனுமதிக்க முடியும்.

எழுதுமட்டுவாழ் பகுதியில் அதி உயர் பாதுகாப்பு வலயம் உள்ளது. அங்கு பொதுமக்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எவரும் செல்ல அனுமதிக்க முடியாது. மக்கள் ஒன்று சேர்ந்து குழு ஒன்றைத் தெரிவு செய்தால், அக்குழு அங்குள்ள நிலைமையை அறிய வசதி செய்யப்படும்.

குடாநாட்டில் 268 வீடுகளில் படையினர் இருந்தனர். அவற்றில் 208 வீடுகளில் இருந்து படையினர் வெளியேறிவிட்டனர். மீதியான வீடுகளில் இருந்து அடுத்த 2 அல்லது 3 மாதங்களில் படையினர் வெளியேறிவிடுவர்.

வரணி - பருத்தித்துறை வீதியில் உள்ள முகாம் முன் உள்ள வீதி ஊடாகப் பொதுமக்கள் செல்வதற்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் - என்றார். (ம-3-31)

## சமாதான முயற்சிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்படவேண்டும்.

மேல் மாகாணத்தை தமிழர்களின் அரசியல் மையமாக்கும் விவகாரத்தில அனைத்து தமிழ்மக்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

மேல்மாகாணம் அன்று தொட்டு இன்றுவரை தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குப் பல்வேறு வழிகளில் உதவி புரிந்து வந்துள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்த நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்த காலப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்குப் புகலிடம் அளித்தது மேல மாகாணமே.

எனவே, தமிழர்களின் ஏகோபித்த உரிமைக்குரல் சர்வதேச ரீதியில் வெளிக்காட்டப்பட மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு தமிழர் தலைமைத்துவம் கட்டியெழுப்பப்படவேண்டும். தமிழர்கள் ஒன்றுபட்ட சக்திகளாக ஒன்றுதிரளவேண்டும்.

தமிழர்கள் சுதந்திரக் காற்றை அனுபவிக்கவேண்டுமானால் ஆட்சிமாற்றம் ஒன்று இந்த நாட்டில் தேவைப்பட்டது. இதற்காகவே ஐ.தே.கட்சி உறுப்பினராக இல்லாதபோதிலும், ஐ.தே.முன்னணி அரசில் இணைந்து தேர்தலில் நிற்கவேண்டியேற்பட்டது. இதன்மூலம ஏற்பட்ட ஆட்சிமாற்றம் பன்னெடுங்காலமாக நிலவிவந்த தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் நடவடிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகுந்த புத்திசாதுரியத்துடன் சமாதான முயற்சிகளைப் படிப்படியாக மேற்கொண்டு வருகின்றார். வெளிநாடுகளின் ஆதரவுடன் இன நெருக்கடியைத் தீர்த்து வைப்பதே அவரது நோக்கமாக இருக்க வேண்டும். அவர் அண்மைக காலங்களில் வெளிநாடுகளுக்குச் சென்றுவருவது இந்த எண்ணத்தை எம் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

பெரும்பான்மையினக் கட்சிகளோ அன்றி அவற்றின் தலைவர்களோ தமிழர்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அல்லர். எனவே, இந்த விடயத்தில் சர்வதேச ரீதியிலான அழுத்தமும், உள்நாட்டு நெருக்குதல்களும் கொடுக்கப்படவேண்டும்.

தற்போதைய சமாதானச் சூழலை விரும்பாத தீய சக்திகள் சில இன நெருக்கடியைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. எனவே, இந்த சக்திகளை இனங்காணும் விடயத்தில் நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

எனவே, அகில இலங்கை ரீதியில் தமிழ்க் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் சமயத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருக்கிறது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டத்துக்குக் குரல் கொடுப்பது, தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பது போன்ற விடயங்களில் ஜனநாயக தேசிய காங்கிரஸ் முழுமூச்சுடன் செயற்பட்டு வந்துள்ளது. இதன்மூலம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் வெற்றிபெறும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

இந்த வெற்றிவாய்ப்பு நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தமிழருக்காய்க் குரல்கொடுக்கும் சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது - என்றார். (ம-எ)


**வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி**

**பதவி வெற்றிடம்**

**லொறிச் சாரதி (அமய அடிப்படையில்)**

மேற்படி சங்கத்திற்கு, லொறிச் சாரதி பதவிக்கு அமய அடிப்படையில் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் *'தலைவர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி'* என்ற விலாசத்திற்கு தபால்மூலமோ, நேரிலோ 31.07.2002 இற்குமுன் அனுப்பிவைக்கவும். சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

*பொது முகாமையாளர்,*
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
மருதங்கேணி, தாளையடி.

(6272)

**கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ண**

**கிரிக்கெட் சுற்றுப்போட்டி - 2002**

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தால் வருடாந்தம் நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி - 27.07.2002
அணி ஒழுங்குத் தெரிவு - 28.07.2002
விண்ணப்பக் கட்டணம் - 300/-

*குறிப்பு:-* எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் கழகங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

- செயலாளர்.

(6271)

**படிவம்**

இலவச சீருடை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது.
விண்ணப்ப முடிவு திகதி: 26.07.2002
படிவம் ஒன்றின் விலை: ரூ. 1.00
**BHARATHI PATHIPPAKAM**
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
PHONE: 021-3081

**தவறிவிட்டது**

முக்கிய ஆவணங்கள் அடங்கிய 'பேர்ஸ்' ஒன்று தட்டாதெரு சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.
*89, Brown Road, Jaffna.* (6263)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல்
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
**நந்தா**
காட்சிகள்: 11.00, 1.30, 5.30 (புதியநேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
**ராஜா**
தினசரி 10.30, 2.30, 5.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கூபாலி, விவேக் நடித்த
**மனதைத் திருடிவிட்டாய்**
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் பொ.சர்மிலன் அவர்களின் அன்புப் பேரனார்

### நல்லையா கனகரத்தினம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்* (6264) — நில அளவைகள் விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### நல்லையா கனகரத்தினம்

(C.T.B. கரம்பகம்)

மிருசுவில், கரம்பகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்பொழுது கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் வசித்து வந்தவருமான நல்லையா கனகரத்தினம் (முன்னாள் உத்தியோகத்தர், C.T.B., கிளிநொச்சி) 19.07.2002 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2002) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
உ.ஜெயராசசிங்கம் (மகன்),
க.பொன்னுத்துரை (தேவா-மருமகன்)

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (6266)

### அந்தோனிப்பிள்ளை ஞானசீலன்

நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஞானசீலன் நேற்று (21.7.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மரியரோஸின் அன்புக் கணவரும் அன்றூட்டெனற் (கனடா), திருமதி மேரிஸ்ரெலா (ஆசிரியை-உடுவில் மகளிர் கல்லூரி), றொசாந்தி, அன்றூட் கிறேசியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அ.யுதாசன் அவர்களின் பாசமிகு மாமனாரும் அ.இருதயநாதன் (பொறியியலாளர், கட்டடத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), திருமதி செபஸ்தியாம்பிள்ளை இராக்கினி, திருமதி மரியநாயகம் ஞானசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நவாலி சென்பீற்றேஸ் தேவாலயத்தில் நாளை (23.7.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலியின்பின் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:-
அ.இருதயநாதன்
(சகோதரன்)

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (6270)

# கண்காணிப்புக்குழு அம்பாறை உறுப்பினர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட முடிவு

## நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதை அடுத்து

கடந்த ஐந்து வாரகாலமாக கூட்ட அமர்வுகளை புறக்கணித்து வந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அம்பாறை மாவட்டக் கிளையின் விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் தமது பகிஷ்கரிப்பை கைவிட முடிவுசெய்துள்ளார்கள்.

அரசின் சமாதான இணைப்புச் செயலகப் பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலகவினால் அவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளமையினாலேயே - அவர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையைக் கைவிட முடிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## அமைச்சர் ரவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பையில் வெடிகுண்டு எடுத்துவந்துள்ளார் என்ற குற்றச்சாட்டை அமைச்சர் ரவி கருணாநாயக்கா கூறினார் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஆலோசிப்பதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த அனைவருக்கும் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் எதனையும் அமைச்சர் ரவி கருணாநாயக்கா முன்வைக்கவில்லை என்பது நன்கு தெரியும்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கா குறிப்பிட்ட கைப்பை, வெடிபொருள்கள் மற்றும் குண்டுகள் அடங்கியது பற்றியதல்ல; நவீன வீடியோ மற்றும் பதிவு உபகரணங்களைக் கொண்டது பற்றியதாகும்.

பிரதமர் அல்லது அமைச்சரவை மீது குண்டுத்தாக்குதல் நடத்த ஜனாதிபதி முயல்வதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் குறிப்பும் அமைச்சரவைக் கூட்டத்தில் கூறப்படவேயில்லை.

அத்தோடு, அடுத்த நாள் காலை ஜனாதிபதியை பிரதமர் சந்தித்த போதுகூட ஜனாதிபதியின் கைப்பையில் வெடிகுண்டு இருப்பதாக முதல் நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் ரவி கருணாநாயக்கா குற்றம் சுமத்தினார் என்று எந்தக் கருத்தையும் - தகவலையும் -- கூட பிரதமரிடம் ஜனாதிபதி கூறவில்லை.

எனவே, 19ஆம் திகதி மாலை அன்றைய திகதியிட்டு ஜனாதிபதி அனுப்பிய கடிதத்தைப் பார்த்ததும் பிரதமர் முற்றாக ஆச்சரியமடைந்தார்.

அமைச்சரவைக் கூட்டம் 17ஆம் திகதி மாலைதான் நடந்தது. ஆனால், இரண்டு நாள் கழித்துத்தான் தனது கைப்பையில் குண்டு இருந்ததாக அமைச்சர் கருணாநாயக்கா குறிப்பிட்டார் என்ற குற்றச்சாட்டை ஜனாதிபதி முதல் தடவையாக முன்வைத்துள்ளார்.

19ஆம் திகதியிடப்பட்ட ஜனாதிபதியின் கடிதம் கிடைத்து சில மணித்தியாலங்களுக்குள் - தாம் நாட்டை விட்டுப் புறப்படுவதற்கு சற்று முன்னர் - அமைச்சர் கருணாநாயக்காவுக்கு எதிராக ஜனாதிபதி குறிப்பிட்டது போன்ற குற்றச்சாட்டு எதையும் அமைச்சர் முன்வைக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு ஜனாதிபதிக்கு பிரதமர் பதில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

இந்தப் பின்னணியில் நோக்கும் போது -

அமைச்சரவையில் இருந்து ரவி கருணாநாயக்காவை நீக்குமளவு பெரும் நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்குரிய காரணம் அடிப்படை, ஏதுமற்றது - தேவையற்றது - என்பது தெளிவாகின்றது.

அமைச்சர்கள் நியமனம் மற்றும் நீக்கம் சம்பந்தமான விடயங்களில் பொருத்தமான அரசமைப்பு ஏற்பாடுகள் தொடர்பில் -

தன்னுடைய சிபாரிசுக்கு அமையவே அமைச்சரவை உருவாக்கப்படும் என்று இணக்கம் காணப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையிலேயே கடந்த டிசெம்பரில் தனது அரசு அமைக்கப்பட்டது என்பதைப் பிரதமர் தமது கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நமது நாட்டில் நிலவும் சூழ்நிலைக்கு அமைய அரசமைப்பின் 44(1) ஆவது பிரிவை இவ்வாறுதான் யதார்த்தபூர்வமாக வியாக்கியானம் செய்யவேண்டும். எனவே, அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க செல்லுபடியான தல்ல - என்றார்.

(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)

### இந்தியத் தூதரை பரராஜசிங்கம் எம்.பி. சந்தித்துப் பேசுவார்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவைக் கைதுசெய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்தியத் தூதுவரைச் சந்திக்கவுள்ளார்.

வைகோ கைது செய்யப்பட்டதானது தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்றும்-

வவுனியாவில் நாளை தமிழர் விடுதலைக் கூட்டணியினால் மேற்கொள்ளப்படவுள்ள ஆர்ப்பாட்ட நிகழ்வுகளின் முடிவில் தான் இந்திய தூதுவரைச் சந்திக்கவுள்ளதாகவும் - ஜோசப் எம்.பி. தெரிவித்தார்.(ம-9)

## அமெரிக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷைச் சந்திக்கிறார். அதையடுத்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் றாம்ஸ்பில்ட் மற்றும் இராஜாங்க அதி காரிகளுடன் உயர்மட்ட சந்திப்பில் பிரதமர் கலந்துகொள்கிறார். (ம-9)

## உலகெங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற நிபந்தனை இருந்தும் கூட திருமாவளவன உணர்ச்சி பொங்க புலிகளைப் பெருமைப்படுத்திப் பேசினார். அப்போது அங்கே கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரும் அதைக் கேட்டு புளகாங்கிதம் அடைந்தனர்.

மாநாடு நேற்றும், நேற்றுமுன்தினமும் சென்னையில் உள்ள எழும்பூர் டொன்பொஸ்கோ மேல்நிலைப் பாடசாலை மண்டபத்தில் நடந்தது. நேற்று இறுதி நிகழ்ச்சியில் திருமாவளவன் வாழ்த்துரை வழங்கினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

நாங்கள் பிரபாகரனுக்கோ, புலிகள இயக்கத்துக்கோ யுத்தத்திற்கான உதவிகளைச் செய்யவில்லை. அவர்களின் உணர்வை மதிக்கிறோம்; பாராட்டுகிறோம்; அவர்களின் கருத்துக்களை ஆதரிக்கிறோம். அவர்களின் கருத்துக்களை நாம் ஆதரிப்பது தவறு என்று அரசு சட்டம் கொண்டுவந்தால் அது பேச்சுச் சுதந்திரத்தை மறுப்பதாகும். அது மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகவும் அமையும். அது மனித இனத்துக்கே சவாலாகிவிடும்.

இன்று தமிழர்களைப் பார்த்து நீங்கள் புலிகளா என்று கேட்கிறார்கள். அந்த அளவிற்கு நிலைமை வந்துவிட்டது. அதனால் அகராதியில் தமிழர்கள் என்றால் புலிகள்; புலிகள் என்றால் தமிழர்கள் என்று அகராதியில் அர்த்தம் தரவேண்டியிருக்கிறது. இப்படி அவர் கூறினார். (ம)

### மூதூரிலும் திருமலையிலும்

# வைகோ கைதைக் கண்டித்து இன்று எதிர்ப்பு நிகழ்வுகள்

மூதூர்,ஜூலை22

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை விடுதலை செய்யக்கோரியும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூர் கிழக்கில் இன்று கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 மணியளவில் மூதூர் கிழக்கில் பல பாகங்களில் இருந்தும் புறப்படும் பேரணி காலை 9 மணியளவில் சேனையூர் நாகம்மாள் ஆலய முன்றிலை வந்தடையும். வைகோவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மகஜர்களை இந்தியப் பிரதமர், தமிழக முதல்வர் ஆகியோருக்கு இந்தியத் தூதரகத்தின் ஊடாக அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேரணியை திருகோணமலை மாவட்ட தமிழ்பேசும் மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

பேரணியின் முடிவில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவியும் எரிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பேரணியை முன்னிட்டு மூதூர் கிழக்குப் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என்பன இன்று செயற்படமாட்டாதென்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - வைகோவை விடுவிக்கக்கோரி திருகோணமலை விஸ்வநாத சிவன் ஆலய முன்றிலில் உண்ணாவிரதமும் கண்டனக் கூட்டமும் இன்று காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவிருக்கின்றன.

இதனையொட்டி திருகோணமலையில் இன்று பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து தமது பணிகளில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## புதிய காவலரண் அமைப்பு

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் மைதானத்துக்கு அருகே புதிய காவலரண் ஒன்றை படையினர் அமைத்துள்ளனர்.

இது யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என குறிப்பிட்ட விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, இது குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப் போவதாகத் தெரிவித்தார்.

## கண்காணிப்புக் குழுவினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

உத்தேச இடைக்கால நிர்வாக சபையில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் அதிகாரப் பகிர்வு ஏற்படும்போது கிழக்கில் முஸ்லிம்களின் பலம் மேலோங்கிவிடும் என்ற அச்ச உணர்வு காரணமாகவே விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய பொறுப்பாளர்கள் முஸ்லிம்களின் விஷயத்தில் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

சமாதானப் பேச்சுக்களில் மூன்றாந்தரப்பாக முஸ்லிம் காங்கிரஸ் இடம்பெறுவதை தடுப்பதற்காகவே சில தீய சக்திகள் கட்சியை பலவீனப்படுத்தும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை யாராலும் பலவீனப்படுத்தி விட முடியாது.

சமாதானப் பேச்சுக்களுக்கான சாதகமான சூழ்நிலையை குழப்பிவிட்டு, அதற்கான முழுப் பழியையும் முஸ்லிம் காங்கிரஸ் மீது சுமத்திவிடவும் சில விஷமச் சக்திகள் எத்தனித்து வருகின்றன.

முஸ்லிம் காங்கிரஸைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் சதி முயற்சிகளுக்கு கட்சியினர் சோரம்போய்விடக்கூடாது. கட்சியின் பேரம் பேசும் பலத்தை எனது தலைமைத்துவத்தின் கீழ் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

கிழக்கில் முஸ்லிம்கள் மீது ஒரு விதமான பொருளாதாரத்தடையை ஏற்படுத்தி, அதன் ஊடாக முஸ்லிம்களது அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் யுக்தியும் கையாளப்படுகின்றது. தெற்கில் சில தீவிரவாத சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முயற்சி அவ்வளவுதூரம் வெற்றியளிக்கவில்லை.

இவ்வாறான, வெளிப்படையான அல்லது மறைமுகமான செயற்பாடுகள் குறித்து, முஸ்லிம்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பேச்சு மூலம் எத்தகைய பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வைக் காண முடியும் - என்றார் அவர். (ம)


## கவிமாமணி பட்டமும் பாராட்டும்

### கவிமாமணியென பெயரணிந்து வாழி!



சிந்தனையில் தேனினிக்கும்
சீர் மதுரக் கவியினிக்கும்
வந்தனையில் பக்திச் சுவை
வளம் பெறும் நல் உவமையினிக்கும்
பந்தமுடன் மரபுப் பாட்டினிக்கும்
பாடல்தரு கருத்தினிக்கும்
விந்தைமிகு மாமதுரக்
கவிமாமணி நீ வாழி.

கவிமாமணி பட்ட வாழ்த்துக்கவி ஆக்கியோன
மஹா வித்துவான் மா.து.நு.வீரமணி ஐயர் M.A.


தெய்வீகக் கவிதைகளையும் தேசியக் கவிதைகளையும் தேசிய பற்றுணர்வோடு நாளும் எழுதி கவிதைத்துறையில் தனக்கோர் இடம்பிடித்து இருநூற்றுக்கு மேற்பட்ட கவியரங்குகளை தலைமையேற்று நடத்தி மதுரமான கவிதைகளைப் படைக்கின்ற சிறந்த கவிஞனும் பேச்சாளனும் வானொலி வர்ணனையாளனும் ஆகிய யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

அவர்களுக்கு அண்மையில் அந்தணகுல மரபினரும் சைவத்தமிழறிஞர்களும் இணைந்து கவிமாமணிப் பட்டம் வழங்கி பொற்பதக்கம் அணிவித்து பாராட்டியமையையிட்டு எமது கழகங்கள் பெருமையடைவதோடு கவிமாமணியின் சைவத்தமிழ் கவிதைத்துறைப் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்தி மகிழ்கின்றது.

சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன்
B.A. ஆசிரியர்.

- மாவை சிவஞானம் பட்டி மன்றக் குழு
- ஈழத்தமிழர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம். (6210)



மிகச் சொற்ப பிரதிகளுடன்

எழுதுநர் சேவை போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்

எதிர்பார்க்கை வினாத்தாள்களுடன்

- கடந்தகாலப் பரீட்சை வினா-விடை.
- மொழித்திறன் விடயங்கள்.
- 120 பொது உளச்சார்பு வினாக்கள் என்பன விரிவான முறையில்.

ஆக்கியோன்: திரு .P.உமாசங்கர் (6269)

சொகுசுப் பயணத்திற்கு!

அழையுங்கள் 2742

கிலோ மீற்றருக்கு 18 ரூபா மட்டுமே!

அம்பாள் ரவல்ஸ்,
கும்பம் லேன்
(மக்கள் வங்கி அருகில்),
திருநெல்வேலி. (6246)

## காரியாலயத்திற்கு வீடு தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பத்திரிகை நிறுவனமொன்றிற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு, - யாழ்.மாநகர சபை, அதனை அண்டிய பகுதிகளில் - தேவையாகவுள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 021 - 3682

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



வையத்துள் அறிமுகம்
19 - 10 - 1935

தெய்வத்துள் சங்கமம்
08 - 08 - 1995

அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா
திதி: 22.07.2002.

பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்புகாட்டி அரவணைத்த
எம் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் அல்ல ஏழாயிரம் ஆண்டுகள்
தான்சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு என்றும் மாறாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:
மனைவி, மைத்துனர்கள், சகோதரிகள், மைத்துனிகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்தையடி,
மானிப்பாய். (687)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.